பக்கங்கள் – 24
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 49

செவ்வாய்க்கிழமை
14 ஜனவரி 2025

தை 01 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

## பாலுக்கு வரிசை!

யாழ்ப்பாணம், ஜன. 14
தைப்பொங்கலை முன்னிட்டு யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளிலும் அமைந்துள்ள பால் விற்பனை நிலையங்களில் ☞23



வாசகர்கள், விளம்பரதாரர்கள், விநியோகஸ்தர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் உதயனின் தைப்பொங்கல் வாழ்த்துகள்.

எத்தகைய சவால்கள் வந்தாலும்

# வாக்குறுதிகள் அனைத்தையும் நிச்சயமாக நிறைவேற்றுவோம்!



### பொங்கல் வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி அநுர தெரிவிப்பு

கொழும்பு, ஜனவரி 14

எத்தகைய சவால்கள் வந்தாலும், அத்தனையையும் எதிர்கொண்டு வாக்குறுதிகள் அனைத்தையும் நிச்சயம் நிறைவேற்றுவோம் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். ☞23

## ஜனாதிபதி அநுர சீனாவுக்குப் பயணம்

கொழும்பு, ஜன. 14
ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மூன்று நாள்கள் பயணமாக சீனாவுக்குச் சென்றுள்ளார். அவரின் சீனப் பயணம் தொடர்பில் இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகள் மிகுந்த கவனத்தைச் செலுத்தியுள்ளன. ☞23

## இலங்கை எப்போதுமே சிங்கள பௌத்த நாடு!

### துள்ளக்கூடாது கஜேந்திரகுமார் மேர்வின் சில்வா தெரிவிப்பு!

கொழும்பு, ஜன. 14
இலங்கையென்பது சிங்கள, பௌத்த நாடாகும். எனவே, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் போன்றவர்கள் இங்கு துள்ளக்கூடாது என்று முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா எச்சரித்துள்ளார். ☞23

யாழ்ப்பாணத்தில் நேற்று

## தோரணம் விற்பனை

யாழ்ப்பாணம், ஜன. 14
பொங்கல் பண்டிகையை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் நேற்று தோரணம் விற்பனை செய்யப்பட்டமையை அவதானிக்க முடிந்தது.
யாழ்ப்பாணம் நகரப் பகுதியிலும், திருநெல்வேலிப் பகுதியிலும் 20 தோரணங்கள் ☞23

மற்றவர்களின் மதம், கலாசாரம் உள்ளிட்ட

## பரஸ்பர உரிமைகளை மதிக்கும் கலாசாரம் இலங்கையில் வரட்டும்

### பொங்கல் வாழ்த்துச் செய்தியில் பிரதமர் ஹரிணி தெரிவிப்பு



கொழும்பு, ஜன. 14
ஒருவரையொருவர் மதித்தல் மற்றும் மற்றவர்களின் மதம், கலாசார உரிமைகளை மதிக்கும் விசேட மனிதப் பண்புகள் கொண்ட இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கு இந்தத் தைப் பொங்கல் தினத்தில் நாம் உறுதிகொள்வோம் என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார். ☞23



## தமிழ்த்தேசியக் கட்சிகளை பலவீனப்படுத்துகிறது இந்தியா

### துமிந்த நாகமுவ குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 14
வடக்கில் தமிழ்த்தேசியக் கட்சிகளைப் பலவீனப்படுத்தும் முயற்சியில் இந்தியா ஈடுபட்டுள்ளதா என்ற சந்தேகம் எழுகின்றது என்று முன்னிலை சோசலிசக் கட்சியின் உறுப்பினர் துமிந்த நாகமுவ குற்றஞ்சாட்டியுள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
'கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவர் திடீரெனத் தோற்றம்பெற்றார். தற்போது அவரைக் ☞23

## ஜப்பானில் நேற்று சுனாமி எச்சரிக்கை

டோக்கியோ, ஜன. 14
ஜப்பானின் தெற்கே உள்ள கியூப் பகுதியில் நேற்று மாலை நிலநடுக்கம் ஏற்பட்டதைத் தொடர்ந்து, சுனாமி எச்சரிக்கை ☞23

## தையிட்டியில் மீண்டும் நேற்றுப் போராட்டம்!

யாழ்ப்பாணம், ஜன. 14
தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரைக் கட்டுமானத்தை அகற்றக் கோரியும், அதனைச் சூழவுள்ள தமிழ் மக்களுக்குச் சொந்தமான தனியார் காணிகளை மீளவும் உரிமையாளர்களிடம் ஒப்படைக்க வலியுறுத்தியும் நேற்றுமுன்தினம் ☞23

'உவையள் கடைசிமட்டும் உப்பிடி மாரித்தவக்கை மாதிரி கத்திக்கொண்டுதான் இருக்கப்போயினம் பாருங்கோ'

900 வருடங்களின் பின்னர்

## பொலநறுவை சிவனுக்கு திருவெம்பாவை பூஜை!



பொலநறுவை, ஜன. 14
பொலநறுவை சிவன் கோவிலில், கிட்டத்தட்ட தொள்ளாயிரம் ஆண்டுகளுக்குப் ☞23

## சிறுமி துஷ்பிரயோகம் நால்வருக்கு மறியல்!

யாழ்ப்பாணம், ஜன. 14
ஊர்காவற்றுறைப்பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சிறுமியொருவரை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் மூவரும், பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்ட சிறுமி ஊர்காவற்று ☞23



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடக சுதந்திரத்தை உறுதிசெய்யுங்கள்!

## ஜனாதிபதி அநுரவுக்குக் கடிதம்

**கொழும்பு, ஜன.14**

**இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஊடக சுதந்திரத்தை உறுதி செய்யவேண்டும் என பத்திரிகையாளர்களை பாதுகாப்பதற்கான குழு, 24 சர்வதேச அமைப்புகளுடன் இணைந்து வேண்டுகோள் விடுத்துள்ளது.**

புதிதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள அரசாங்கம் ஊடகவியலாளர்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளை மீள ஆரம்பிக்க வேண்டும் என்றும் அவை வலியுறுத்தியுள்ளன.

இதுதொடர்பில் ஜனாதிபதிக்கு அவை எழுதியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

ஊடக சுதந்திரம் மற்றும் கருத்துச் சுதந்திரத்துக்கான உரிமைகளை உறுதி செய்யுமாறு உங்களை நாங்கள் கேட்டுக்கொள்கின்றோம்.

ஊடக சுதந்திரத்தை உறுதி செய்வது மற்றும் பத்திரிகையாளர்களுக்கு எதிரான கடந்தகாலக் குற்றங்களுக்குப் பொறுப்புக்கூறலை உறுதி செய்வது தொடர்பான தேசிய மக்கள் சக்தியின் வாக்குறுதிகளை நாம் வரவேற்கின்றோம். தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் அறிக்கையில் இது தொடர்பாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள அரசாங்கம் ஊடகவியலாளர்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளை ஆரம்பிக்க வேண்டும்.

இந்தச் சம்பவங்களுக்கான பொறுப்புக்கூறலுக்கான உடனடி பக்கச்சார்பற்ற வெளிப்படையான விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என்றுள்ளது. (எ-இ)

# மின்சாரவேலியில் சிக்கி ஒருவர் சாவு

மொனராகலை, ஜன.14

மொனராகலை, சிறிபுரயாயப் பிரதேசத்தில் மின்சாரவேலியில் சிக்கி ஒருவர் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்துள்ளார் என்று மொனராகலைப் பொலிஸார் தெரிவித்தனர். உயிரிழந்தவர் மொனராகலை, ஒக்கம்பிட்டியப் பிரதேசத்தைச் சேர்ந்த 49 வயதுடையவர் ஆவார். காட்டு விலங்குகளிடமிருந்து பயிர்களைப் பாதுகாப்பதற்காகக் காணி ஒன்றைச் சுற்றி சட்டவிரோதமாகப் பொருத்தப்பட்டிருந்த மின்சாரவேலியில் சிக்கி அவர் உயிரிழந்துள்ளார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மொனராகலைப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (எ-33)

# ரோஹிங்கியருக்கு ஆதரவாக போராட்டம் ஜாட்சன் பிகிராடோவிடம் விசாரணை

மன்னார், ஜன.14

கடந்த 9ஆம் திகதி முல்லைத்தீவில் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டம் தொடர்பாக மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு அழைக்கப்பட்டுள்ளார். மன்னார் கோந்தை பிட்டியில் அமைந்துள்ள குற்ற விசாரணை அலுவலகத்தில் இருந்து நேற்றுமுன்தினம் வந்த பொலிஸார் அழைப்புக்கடிதத்தை கையளித்துள்ளனர். முல்லைத்தீவில் கரையொதுங்கிய ரோஹிங்கிய முஸ்லிம்களை நாடு கடத்தக்கூடாது என்று வலியுறுத்தியே கடந்த 9ஆம் திகதி ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது. (எ-56)

# வழிப்பறி கொள்ளையில் ஈடுபட்டோர் கைது

கொழும்பு, ஜன.14

வழிப்பறி கொள்ளையில் ஈடுபட்டார் என்று கூறப்படும் முன்னாள் பொலிஸ் கான்ஸ்டபிள் உட்பட மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று ஹங்வெல்ல பொலிஸார் தெரிவித்தனர்.

தும்மோதர பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர்கள் மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேக நபர்களிடமிருந்து ஐஸ் போதைப்பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹங்வெல்ல பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# உலகப் பொருளாதார வளர்ச்சி இந்த ஆண்டில் மாற்றமில்லை!

கொழும்பு, ஜன.14

இந்த ஆண்டு உலகப் பொருளாதார வளர்ச்சி கடந்த ஆண்டில் இருந்ததைப் போன்றே மாறாது 2.8 வீதமாக இருக்கும் என்று கணிப்பிடப்பட்டுள்ளது. ஐக்கியநாடுகள் சபையால் அண்மையில் வெளியிடப்பட்ட உலகப் பொருளாதார நிலைமை மற்றும் வாய்ப்புக்கள் தொடர்பான புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையின்படி சீனா மற்றும் அமெரிக்கா ஆகிய நேர்மறையான ஆனால் ஓரளவு மெதுவான பொருளாதார வளர்ச்சியைக் கொண்டிருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான் மற்றும் பிரிட்டன் என்பன மிதமான மீட்சிகளைக் கொண்டிருக்கும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தியா மற்றும் இந்தோனேசியாக ஆகிய நாடுகளின் பொருளாதாரம் வலுவான செயல்திறனால் பூர்த்தி செய்யப்படும் என்றும் ஐக்கிய நாடுகள் சபையின் உலகப்பொருளாதார நிலைமை மற்றும் வாய்ப்புக்கள் தொடர்பான அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)



# பேஸ்புக் களியாட்டம் 10 பேர் கைது

பொலன்னறுவை, பெந்திவெவ பிரதேசத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றில் பேஸ்புக் களியாட்டம் ஒன்றை ஏற்பாடு செய்தனர் என்று கூறப்படும் 10 பேர் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை கைது செய் யப்பட்டுள்ளனர். அரலகங்வில பொலிஸ் விசேட அதிரடிப்படை முகா முக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பிலேயே சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் 18 முதல் 30 வயதுக்குட்பட்டவர்கள் என்றும், சந்தேக நபர்களிடமிருந்து 550 கிராம் கொக்கேன் போதைப்பொருள் மற்றும் 45 வெளிநாட்டு மதுபான போத்தல்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-இ)

# மருந்துத்துறைக் குறைபாடுகளை தீர்ப்பது தொடர்பில் ஆலோசனை

மருந்துத் துறையில் உள்ள பிரச்சினைகள் மற்றும் குறைபாடு களைத் தீர்ப்பதற்கும் சரிசெய்வதற்கும் அர்ப்பணிப்புடன் செயல்படும் அனைத்து ஊழியர்களையும் ஊக்குவித்துப் பாதுகாப்பேன் என்று சுகாதார அமைச்சர் வைத்தியர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். நாரஹேன்பிட்டவில் உள்ள 'மெஹெவர பியச' அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள அரச மருந்தகக் கூட்டுத்தாபன அலுவலகத்துக்குத் திடீர் கண்காணிப்புப் பயணம் ஒன்றை மேற்கொண்ட சுகாதார அமைச்சர் அங்கு கருத்துத் தெரிவித்தபோதே இவ்வாறு தெரிவித்துள்ளார். மருந்து விநியோக வலையமைப்பு மற்றும் அதன் தற்போதைய செயல்பாடு, மருந்து கொள்முதல் செயல்முறை மற்றும் மருந்து விநியோகத் திட்டம் மற்றும் எதிர்காலத்தில் இந்த நடவடிக்கைகள் எவ்வாறு உருவாக்கப்பட வேண்டும் என்பது தொடர்பாகவும் சுகாதார அமைச்சர் நிர்வாக அதிகாரிக்கு அறிவுறுத்தல்களை வழங்கினார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

**சுபிரி தன சம்பத**

| திகதி | தினம் | வெற்றி வாரம் |
|---|---|---|
| 13.01.2025 | திங்கட்கிழமை | 0423 |

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|
| G | 0 7 3 1 9 8 |

**Super Ball DLB**

| திகதி | தினம் |
|---|---|
| 13.01.2025 | திங்கட்கிழமை |

| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|
| 2689 | A | 02 07 08 13 |

**சனிதா DLB**

| திகதி | தினம் |
|---|---|
| 13.01.2025 | திங்கட்கிழமை |

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|
| Q | 27 30 33 35 | 4850 |

**லக்ன ராசி**

| திகதி | தினம் |
|---|---|
| 13.01.2025 | திங்கட்கிழமை |

| விருச்சிகம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
|---|---|---|
| | 13 24 27 54 | 4401 |

**KAPRUKA DLB**

| திகதி | தினம் |
|---|---|
| 13.01.2025 | திங்கட்கிழமை |

| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|
| F | 21 | 18 27 42 63 | 1865 |

**அத கோடிபதி DLB**

| திகதி | தினம் |
|---|---|
| 13.01.2025 | திங்கட்கிழமை |

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|
| Z | 08 13 56 72 | 2515 |

**JAYODA DLB**

| திகதி | தினம் |
|---|---|
| 13.01.2025 | திங்கட்கிழமை |

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|
| R | 11 14 25 61 | 2094 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி கையெழுத்து சேகரிப்பு!

திருகோணமலை, ஜன.14
சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை விடுதலை செய்யக்கோரி முன்னெடுக்கப்பட்டுவரும் கையெழுத்துச் சேகரிப்புப் போராட்டம் நேற்று திருகோணமலை சிவன் ஆலயத்துக்கு முன்பாக நடைபெற்றது. போராளிகள் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் கையெழுத்துச் சேகரிப்பு முன்னெடுக்கப்பட்டது. அதில் பலர் கலந்துகொண்டு கையெழுத்திட்டனர். (எ-இ)








# நாடாளுமன்ற ஊழியர்கள் இடைநீக்கம்

கொழும்பு, ஜன.14
பாலியல் துன்புறுத்தல் குற்றச்சாட்டுகள் தொடர்பாக மூன்று நாடாளுமன்ற ஊழியர்கள் சேவையிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.
இடைநீக்கம் செய்யப்பட்டவர்களில் நாடாளுமன்றத்தின் சமையல் மற்றும் சிற்றுாழியர் துறையின் உதவி வீட்டுப் பணியாளரும் அடங்குகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
சம்பவத்தை விசாரிக்க நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் இடைநீக்கம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது என்று நாடாளுமன்ற நிர்வாகம் தெரிவித்துள்ளது.
பாலியல் துன்புறுத்தல் குற்றச்சாட்டுகள் 2023ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் பதிவாகியிருந்தது. இதுதொடர்பில் முன்னாள் உயர் நீதிமன்ற நீதிபதி குசலா சரோஜனி வீரவர்தன தலைமையிலான குழுவால் உள்ளக விசாரணைகள் நடத்தப்பட்டிருந்தன. (எ-இ)

# இலங்கையரைத் திருமணம் செய்து கைவிடும் வெளிநாட்டுப் பிரஜைகள்

கொழும்பு, ஜன.14
வெளிநாட்டுப் பிரஜைகள் இலங்கைப் பெண்களைத் திருமணம் செய்ததன் பின்னர் கைவிட்டுச்செல்லும் சம்பவங்கள் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.
வெளிநாட்டுப் பிரஜை ஒருவரைத் திருமணம் செய்து பின்னர் அவரால் கைவிடப்பட்ட பெண் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்துள்ளார். இந்த வழக்கில் ஆஜரான சட்டத்தரணி பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு இழப்பீடு வழங்கப்பட வேண்டுமெனவும், விவாகரத்துப் பெற்றுகொடுக்கப்பட வேண்டுமெனவும் இவ்வாறான பல சம்பவங்கள் நாட்டில் இடம்பெற்றுவருவதாகவும் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார். (எ-33,6)



# கடத்தப்பட்ட மாணவி மீட்பு

அம்பாறை, ஜன.14
நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கண்டி தலவுல கல பகுதியில் வானில் கடத்தப்பட்ட மாணவி அம்பாறை பஸ் தரிப்பிடத்தில் வைத்து கண்டிக்குப் புறப்படவிருந்த பஸ்ஸில் நேற்றுத் திங்கட்கிழமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளார்.
சிறுமியைக் கடத்திச்சென்ற நபரும் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும், இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-40,555)

# தொடரும் பண்டிகைக்கால சோதனைகள்

கொழும்பு, ஜன.14
பண்டிகைக் காலத்தில் நுகர்வோர் விவகார அதிகார சபையால் முன்னெடுக்கப்பட்டுவரும் விசேட சோதனை வேலைத்திட்டம் நாளைவரை முன்னெடுக்கப்படவுள்ளது. மொத்த மற்றும் சில்லறை அரிசி விற்பனை நிலையங்கள் சோதனைக்குட்படுத்தப்பட்டு அதிக விலைக்குப் பொருள்களை விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது.
நுகர்வோர் விவகார அதிகார சபை அதிகாரிகள் இந்தக் காலப் பகுதியில் சில்லறை விற்பனை நிலையங்கள் மற்றும் பல்பொருள் அங்காடிகள் போன்ற வணிகத் தளங்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்திவருகின்றனர் என்றுதெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

செக்கில ஆட்டியெடுத்த சுத்தமான உருட்டுகளை சாதாரண ஆக்கள் சொல்லிக்கேள்விப்பட்டிருப்பியள். ஆனால் சாணக்கியம் தெரிஞ்ச எம்.பி. மார் இப்பிடி செத்தமீன் துடிக்குது எண்டு சொல்ற உருட்டுகளைக் கேக்க, இதுகளை விட சாதாரண ஆக்களின்ர புளுகுகளே பரவாயில்லை எண்டமாதிரியிருக்கு.

பக்கத்து நாட்டில அயலகத் தமிழர் தினத்துக்கு இஞ்சையிருந்து சிலர் 'நானும் எம்.பி. தான்' எண்ட கணக்கில அழையாவிருந்தாளியளாய் போனவை வல்லோ. இஞ்ச சனத்தின்ர பிரச்சினையளுக்கே ஒழுங்கா வரத்தெரியாதவை ஏன் அங்க அழையா விருந்தாளியாப் போனவையெண்டும் பட்சி காரணத்தோட சொல்லியிருந்தது. சடையாருக்கு கிடைச்ச மரியாதை தங்களுக்கு கிடைக்காத விசயம் சனத்துக்கு தெரியவரக்கூடாதெண்டுதான் உடையாரையும் இழுத்துக்கொண்டு அவரின்ர மட்டக்களப்புக் கைத்தடி மினக்கெட்டு அங்கபோனவர். முந்தநாள் அவரின்ர பேஸ்புக்கில பார்த்தால், தமிழக முதலமைச்சர் ஸ்டாலினோட நிண்டு செல்பி எடுத்து 'நிகழ்வில அவரை நேர சந்திச்சுக் கதைச்சனாங்கள். அப்ப முதலமைச்சரே தன்ர போனில எங்களை செல்பி எடுத்தவர்' எண்டு விலாவாரியா எழுதி நாலைஞ்சு படங்களும் போட்டிருந்தார். அந்தப் பாடமொண்டும் 'ஏ.ஐ'யில செய்ததும் இல்லை,ஒரிஜினல் படம்தான். ஸ்டாலின் போனில படமெடுக்க, பின்னுக்கு உடையாரும், கைத்தடியும், சங்கில வெண்ட அடையாரும் ஏதோ அடைய முடியாததை அடைஞ்ச ஆனந்தத்தோட நிண்டினம். இதைப்பார்த்த சனமும் 'உண்மையிலேயே அவையள் பவர் உள்ள ஆக்கள் தான்'எண்டுதானே நினைப்பினம்.

அழைச்ச விருந்தாளியளையே தனியக் கூப்பிட்டு கதைக்காத ஸ்டாலின் , அழையாமல் போன இவையளை மட்டும் எப்பிடிக் கூப்பிட்டுக் கதைச்சு, அதுவும் தன்ர போனில இவையளை செல்பி எடுத்தவர் எண்டது பட்சிக்கும் முதலில விளங்காத புதிராத்தான் இருந்தது. ஆனால் மண்டையில இருந்த கொண்டையை மறந்தமாதிரி, இந்த செல்பி எடுத்த அழையா விருந்தாளியள், தங்களை மாதிரி அந்த நிகழ்வுக்கு வேற ஆக்களும் வந்தவை எண்டதையோ, அந்த நிகழ்ச்சியை தமிழக அரசாங்கம் யூரியூப்பில போடுமெண்டதையோ மறந்துபோச்சினம். அந்த நிகழ்வுக்கு இலங்கையில இருந்து போன , யாழ்ப்பாணக் கம்பஸில அரசியல் படிச்ச ஒருத்தர் இவையின்ர ஏமாத்து செல்பியைக் கண்டிட்டு, உண்மையை பப்ளிக்கா பேஸ்புக்கில 'யூரியூப் லிங்கோட' போட்டுடைச்ச பிறகுதான் நடந்தது என்னவெண்டு எல்லாருக்கும் தெரியவந்திருக்கு. அந்த நிகழ்ச்சி முடிய ஸ்டாலின் கீழ இருந்த சனத்தோட வந்து , அவையளின்ர போனை தான் வாங்கி செல்பி எடுத்திருக்கிறார். அப்பிடி சனத்தோட சனமா இடிபட்டு, நெருக்குப்பட்டுத்தான் உந்த அழையா விருந்தாளியளும் தங்கட போனை ஸ்டாலினிட்ட குடுத்து செல்பி எடுத்திருக்கினம். இப்பிடி வழியில போன ஸ்டாலினோட நிண்டு செல்பி எடுத்திட்டு, எழுப்பம் காட்டியிருக்கினம். உந்தச் செல்பி விசயத்திலையே இப்பிடியெல்லாம் சுத்து மாத்துச் செய்யிறவை இஞ்ச என்னவெல்லாம் செய்திருப்பினம் எண்டு யோசிக்க தலைசுத்துது கண்டியளோ.

padsi@uthayan.com - பட்சி





# விபத்தில் இருவர் காயம்

கிளிநொச்சி, ஜன.14
கிளிநொச்சியில் நேற்று நடந்த விபத்தில் இருவர் காயமடைந்துள்ளனர். பரந்தனில் இருந்து கிளிநொச்சி நோக்கிப் பயணித்த ஓட்டுநர் பயிற்சிப் பாடசாலைக்குச் சொந்தமான முச்சக்கர வண்டி ஒன்றை, அதே திசையில் பயணித்த மோட்டார் சைக்கிள் மோதி விபத்து நடந்துள்ளது. மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரே விபத்தில் காயமடைந்துள்ளனர்.
காயமடைந்தவர்கள் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ள நிலையில், இந்த விபத்துத் தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (எ-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் திடீர் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. தந்தை வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்கு மேல் தொடங்குவது சாதகமாக முடியும்.

**இடபம்:** தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியங்கள் சாதகமாக முடியும். சகோதரர்கள் கேட்கும் உதவியை செய்து தருவீர்கள். சிலருக்கு எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் சமாளித்து விடுவீர்கள்.

**மிதுனம்:** மனம் உற்சாகத்துடன் காணப்படும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்புண்டு. சிலருக்குக் குலதெய்வக் கோயிலுக்குச் சென்று பிரார்த்தனையை நிறைவேற்றும் சந்தர்ப்பம் கூடி வரும். ஆனால், மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும்.

**கடகம்:** இன்று அவசர முடிவுகள் எடுப்பதைத் தவிர்க்கவும். எதிர்பாராத செலவுகளால் கையிருப்பு கரைவதுடன் கடன் வாங்கவும் நேரிடும். உறவினர்கள் வருகையால் மகிழ்ச்சி ஏற்பட்டாலும் சில சங்கடங்களும் ஏற்படக்கூடும்.

**சிம்மம்:** வாழ்க்கைத்துணையின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். அரசாங்கக் காரியங்கள் முடிவதில் தாமதம் உண்டாகும். வாழ்க்கைத்துணை வழி உறவினர்களால் சிலருக்கு ஆதாயம் உண்டாகும்.

**கன்னி:** எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாக முடியும். உடல் ஆரோக்கியம் மேம்படும். மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும்.

**துலாம்:** வீண் செலவுகள் ஏற்படக்கூடும். முக்கியமான முடிவுகள் எதுவும் எடுக்கவேண்டாம். கூடுமானவரை வீண் அலைச்சலைத் தவிர்த்து விடுவது நல்லது. வெளியிடங்களில் உணவு சாப்பிடுவதைத் தவிர்க்கவும்.

**விருச்சிகம்:** எதிர்பாராத செலவுகளைச் சமாளிக்கக் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலை ஏற்படக்கூடும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சிலருக்கு எதிர்பாராத பயணங்களுக்கு வாய்ப்பு உண்டு.

**தனுசு:** அரசாங்க அதிகாரிகளைச் சந்திக்கும் போது பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். உங்களுடைய முயற்சிக்கு வாழ்க்கைத்துணையின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**மகரம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. கொடுத்த கடன் திரும்பக் கிடைக்கும். குடும்பத்தில் உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தரும். பிள்ளைகளால் பெருமை அடைவீர்கள்.

**கும்பம்:** கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். சிலருக்கு திடீர்ப் பயணம் மேற்கொள்ள நேரிடும்.

**மீனம்:** உற்சாகமான நாளாக அமையும். ஆனால், புதிய முயற்சி எதையும் மேற்கொள்ளவேண்டாம். சிலருக்கு திடீர்ச் செலவுகளால் கடன் வாங்கவும் நேரிடும். சகோதரர்களால் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.



'உதயன்' ஊடக அனுசரணையுடன் நடத்தப்பட்ட

# கலைமகள் பிறிமியர் லீக்; சம்பியன் சுழிபுரம் றைனோஸ்

யாழ்ப்பாணம் ஜன.14

உதயன் பத்திரிகையின் பிரதான ஊடக அனுசரணையுடன் சுழிபுரம் மேற்குக் கலைமகள் விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்பட்ட கலைமகள் பிறிமியர் லீக்கின் சம்பியன் கிண்ணத்தை சுழிபுரம் றைனோஸ் அணி தனதாக்கிக் கொண்டது.

சுழிபுரம் றைனோஸ் அணிக்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா பரிசுத் தொகையையும் வெற்றிகேடயத்தையும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட உதயன் பத்திரிகையின் ஆசிரியர் த.பிரபாகரன் வழங்கினார். பரிசளிப்புவிழா சுழிபுரம் மேற்குக் கலைமகள் கலையரங்கில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

பிறிமியர் லீக்கில் 5 அணிகள் பங்குபற்றியிருந்த நிலையில் மூன்றாம் இடத்தை கிறேசி தமிழ் போய்ஸ் அணியும், இரண்டாம் இடத்தை வாராகி சூப்பர் கிங்ஸ் அணியும் பெற்றுக்கொண்டன. இறுதிச் சுற்றின் சம்பியனாகச் சுழிபுரம் றைனோஸ் அணியும் தெரிவு செய்யப்பட்டிருந்தது.

இறுதிப் போட்டியின் ஆட்டநாயகனாகச் சுழிபுரம் றைனோஸ் அணியைச் சேர்ந்த ஜிந்துசனும், தொடர் ஆட்டநாயகனாகச் சுழிபுரம் றைனோஸ் அணியைச் சேர்ந்த பவுணனும், சிறந்த துடுப்பாட்ட வீரராக சுழிபுரம் றைனோஸ் அணியைச் சேர்ந்த லகீஸும், சிறந்த பந்துவீச்சாளராக வாராகி சூப்பர் கிங்ஸ் அணியைச் சேர்ந்த கனிஸ்கரும் தெரிவு செய்யப்பட்டு, அவர்களுக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் கலைமகள் விளையாட்டுக் கழகத்தினர், சுழிபுரம் மேற்கு சமூகமட்ட அமைப்பின் பிரதிநிதிகள், விளையாட்டுக் கழகங்களின் வீரர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (எ-33-125)

# விபுலானந்தா ப.மா.சங்கத்துக்கு புதிய நிர்வாகம்

வவுனியா, ஜன.14

வவுனியா விபுலானந்தா கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்துக்கு புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டுள்ளது என்று கல்லூரியின் அதிபர் திருமதி ஞானமதி மோகனதாஸ் தெரிவித்துள்ளார்.

2025-2027 அம் ஆண்டுக்கான புதிய நிர்வாகத்தில் தலைவராக கல்லூரி அதிபர் திருமதி ஞானமதி மோகனதாஸ், செயலாளராக பா.லம்போதரன், பொருளாளராக பூ. சர்மிளன், உப தலைவராக க. ஶ்ரீதரன், உப செயலாளராக தி.கார்த்திக் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டதுடன், நிர்வாகசபை உறுப்பினர்களாக ஆர். கபிலன், ஜே.சசிகுமார், வ.பிரதீபன், பி.குமணன், திருமதி எம்.ஜெயலட்சுமி, எஸ்.துவாகரன், எஸ்.சுவேதா, கே. ஹம்ஷிகா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கணக்காய்வாளராக வி.அனோஜனும், ஆலோசகர்களாக ஐ. யோகநாதன், சி.தர்சன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (எ-இ)




உடற்கல்வி டிப்ளோமா ஆசிரிய சங்கத்தின் சமூக செயல்பாடான பண்பாட்டை பாதுகாப்போம் பண்பாட்டை விதைப்போம் என்னும் திட்டத்தின் கீழ் பொங்கல் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன. வள்ளுவர் சனசமூக நிலையத்தில் நடந்த நிகழவில் சங்கத்தின் தலைவர் ப.தர்மகுமாரன் பொங்கல் பொருள்களைக் கைளித்தார். (எ-125)

# பொங்கல் பொருள்கள் விற்பனை அமோகம்

யாழ்ப்பாணம், ஜன. 14

பொங்கல் திருநாளை முன்னிட்டு யாழ். குடாநாட்டில் பொங்கல் பொருள்களின் விற்பனை களைகட்டியுள்ளது. யாழ்ப்பாணத்தில் திருநெல்வேலி, சுன்னாகம், மருதனார்மடம், சங்கானை, சாவகச்சேரி,யாழ்.நகர் மற்றும் கொடிகாமம் பிரதேசங்களிலும், கிளிநொச்சி, மன்னார், வவுனியா மாவட்டங்களிலும் மக்கள் ஆர்வத்துடன் பொங்கல் பொருள்களை கொள்வனவு செய்வதைக் காணமுடிந்தது. இஞ்சி,மஞ்சள் இலை,கரும்பு,பழவகைகள்,பானைகள் மற்றும் பொங்கலுக்கு தேவையான இதர பொருள்கள் நேற்று திங்கட்கிழமை அதிகளவில் விற்பனை செய்யப்பட்டன. (எ-25,40)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சிச்சபைத் தேர்தலை பிற்போடுவதற்கு வாய்ப்பில்லை

## மஹிந்த தேசப்பிரிய சுட்டிக்காட்டு



கொழும்பு, ஜன.14

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை எதிர்வரும் மார்ச் மாத நடுப்பகுதியிலோ அல்லது ஏப்ரல் மாத முதல்வாரத்திலோ நடத்துவதற்குச் சாத்தியம் உள்ளது. தேர்தலை விரைவாக நடத்தவேண்டும் என்று உயர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளதால் தேர்தலைப் பிற்போட முடியாது என்று தெரிவித்துள்ளார் தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மஹிந்த தேசப்பிரிய. நேற்றுமுன்தினம் கொழும்பு தேசிய நூலகத்தில் நடந்த நிகழ்வொன்றில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் வாக்கெடுப்புக்காகவும், ஏற்றுக்கொள்ளப்பட்ட வேட்புமனுக்களை இரத்துச் செய்து, மீண்டும் வேட்புமனுக்களை கோரும் வகையில் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் திருத்தச் சட்டவரைவு முதலாம் வாசிப்புக்காக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த சட்டவரைவு வெகுவிரைவில் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளோம். உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சட்ட திருத்தம் தொடர்பில் உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சிடம் பல யோசனைகளை முன்வைத்துள்ளோம். உள்ளூராட்சிமன்றத் தேர்தல் பிற்போடப்பட்டுள்ளதால் நாட்டு மக்களின் அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளது.

தேர்தல் சட்ட திருத்தத்துக்குள் உள்ளடக்கப்படாத விடயங்களை ஆணைக்குழு செயற்படுத்தலாம். அதனால் எவ்வித சட்ட சிக்கல்களும் ஏற்படாது. பெண் பிரதிநிதித்துவத்துக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்பது தொடர்பாக அரசியல் கட்சிகளுடன் பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளோம் என்றார். (எ-இ)

# சிறைச்சாலை மருத்துவமனையில் துமிந்த சில்வா

கொழும்பு, ஜன.14

தூக்குத் தண்டனை கைதியான துமிந்த சில்வா மீண்டும் சிறைச்சாலை மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார் என்று சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. சிறைச்சாலை மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த துமிந்த சில்வா கடந்த 10ஆம் திகதி வெலிக்கடை சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டார். ஆயினும் திடீர் உபாதை காரணமாக அவர் கொழும்பு தேசிய மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். தற்போது தேசிய மருத்துவமனையில் சிகிச்சை முடிந்து நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மீண்டும் சிறைச்சாலை மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். (எ-இ)



# ஐ.நா. சட்டங்களுக்கு ஏற்ப ரோஹிங்கியர்களுக்குத் தீர்வு

## பொன்சேகா தெரிவிப்பு

ரோஹிங்ய புகலிடக்கோரிக்கையாளர்கள் தொடர்பில் சர்வதேசச் சட்டத்தின் பிரகாரம் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது

சட்டவிரோதப் புகலிடக்கோரிக்கையாளர்களைப் பராமரிக்கக்கூடிய நிலையில் நாடு இல்லை. எமது நாடு சிறிய நாடாகும். இங்கு வாழ்பவர்களே கஷ்டங்களுக்கு மத்தியில்தான் வாழ்கின்றனர். இதற்குரிய சர்வதேசச் சட்டதிட்டங்கள் உள்ளன. அதற்கமையத் தீர்வு தேடப்படவேண்டும். புகலிடக்கோரிக்கையாளர்கள் விவகாரத்தைக் கையாள்வதற்கு ஐ.நா.வில் தனிக் கிளையொன்று உள்ளது. அதனால் ஐ.நா. ஊடாகவே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் - என்றார். (ம-33-44)

# சஜித் திருந்தாவிட்டால் ஐ.ம.சக்தி பிளவுபடும்

## எச்சரிக்கின்றார் ஹிருணிகா

கொழும்பு, ஜன.14

சஜித் பிரேமதாஸ தனது தவறுகளை சரி செய்துகொள்ளாவிட்டால், அவரை கைவிட்டு ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் ரணிலுடன் சங்கமிக்கக்கூடும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் ஹிருணிக்கா பிரேமசந்திர தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

ஐக்கிய மக்கள் சக்தி மறுசீரமைக்கப்பட வேண்டும். கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தனது குறைபாடுகளை இனங்கண்டு அவற்றைத் திருத்திக்கொள்ள வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் எமது பக்கம் இருப்பவர்கள் சஜித்தை கைவிட்டு ரணில் விக்கிரமசிங்கவுடன் இணையக்கூடும். எனக்கு ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணையும் திட்டம் இல்லை. ஐக்கிய மக்கள் சக்தியுடனேயே பயணிக்க எதிர்பார்க்கின்றேன். சஜித் தன்னைப் பலப்படுத்திக்கொண்டால் பிறரின் உதவிகள் தேவைப்படாது-என்றார். (எ-44)

# கைத்தொழில் பேட்டைகளை வடக்கில் உருவாக்கத்திட்டம்

## ரஜீவன் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.14

வடக்கு மக்களின் பொருளாதாரத்தை வலுப்பெறச் செய்யும்வகையில் வடக்கில் ஐந்து கைத்தொழில் பேட்டைகள் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஜெ.ரஜீவன் தெரிவித்துள்ளார்.

சுழிபுரத்தில் யாழ்ப்பாணம் இந்தியத் துணைத் தூதரகத்தால் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டது. அந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

மக்களுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்கிப் பொருளாதாரத்தை உயர்த்துவதற்கான வேலைத்திட்டத்தில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. ஊழல் ஒழிப்புத் திட்டங்களில் நாம் மும்முரமாக உள்ளோம். இலங்கையை அழகான தேசமாக மாற்றுவதற்கு எதிர்பார்த்திருக்கின்றோம் என்றார். (எ-125)



# கொள்கலன் விடுவிப்பு தாமதத்தை முடிவுக்குக் கொண்டுவர உத்தரவு

கொழும்பு, ஜன.14

இறக்குமதி செய்யப்பட்ட கொள்கலன்களை விடுவிப்பதில் ஏற்பட்டுள்ள தாமதத்தை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவருமாறு ஜனாதிபதி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார். இலங்கை சுங்கம், துறைமுக அதிகார சபை, கொள்கலன் ஊர்தி உரிமையாளர் மற்றும் துறைமுகம் சார்ந்த சேவைகளை வழங்கும் சங்கங்களுக்கு இடையிலான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் நடைபெற்றது.

சுங்கத் திணைக்களத்தால் வழங்கப்படும் அனுமதி தாமதிக்கப்படுவதால் கடந்த இரு வாரங்களில் கொழும்புத் துறைமுகத்துக்கு வந்த சுமார் 30 கப்பல்கள் வேறு துறைமுகங்களுக்குத் திரும்பிச் சென்றுள்ளன என்று துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க சுட்டிக்காட்டினார். கடந்த சில நாள்களாக ஒருகொடவத்த மற்றும் பாலத்துறைப் பிரதேசங்களில் உள்ள வீதிகளின் இருபக்கங்களிலும் கொள்கலன் தாங்கி ஊர்திகள் நீண்டவரிசையில் நிறுத்தப்பட்டுள்ளன. சுங்கத் திணைக்களத்தால் நடத்தப்படும் விசேட சோதனை நடவடிக்கைகளால் இந்தத் தாமதம் ஏற்பட்டுள்ளது என்று கொள்கலன்தாங்கி ஊர்திச் சாரதிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். கடந்தசிலநாள்களாக துறைமுக வளாகத்தில் பல கொள்கலன்கள் விடுவிக்கப்படாமல் தேங்கிக் கிடக்கின்றன என்று கொள்கலன்தாங்கி ஊர்தி உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர். அதையடுத்தே ஜனாதிபதி மேற்கண்ட உத்தரவை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு விடுத்துள்ளார். (எ-இ)

# வாகன இறக்குமதிக்கான வரி 500 வீதத்தால் அதிகரிக்கலாம்

கொழும்பு, ஜன.14

அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டுள்ள புதிய வரிக்கொள்கைகளுக்கு அமைய வாகன இறக்குமதிக்கான மொத்தவரி 500 சதவீதமாக அதிகக்கூடும் என்று இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. அந்தச் சங்கத்தின் தலைவர் பிரசாத் மானகே இதுதொடர்பாகத் தெரிவித்துள்ளதாவது

இந்த ஆண்டுக்குள் 50 ஆயிரம் வாகனங்களை இறக்குமதி செய்ய முடியும். கடந்த 5 ஆண்டுகளாக நிலவிய வாகன இறக்குமதிக்கான தடையைத் தளர்த்தி அரசாங்கம் மீண்டும் அனுமதி வழங்கியுள்ளது. எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதல் இறக்குமதி செய்யப்படும் அனைத்து வாகனங்களுக்குமான வரி வி[illegible] உள்ளடங்கிய அதிவிசேட வர்த்தமானி கடந்தவாரம் வெளியிடப்பட்டுள்ளது என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

செயலுக்கு முன்பே விளைவுகள் குறித்து எண்ணி அஞ்சுகின்ற கோழைக்கு வெற்றி என்பது வெகுதூரம்.

–ஜவஹர்லால் நேரு–

# சீனத்திடம் அவதானம்!

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க சீனாவுக்குச் சென்றிருக்கின்றார். செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போதும், அதன் பின்னர் நடைபெற்ற பொதுத்தேர்தலின்போதும் தேசிய மக்கள் சக்தியின் ஆதிக்கம் வலுவாக நிலை நாட்டப்பட்டது. இதனால், இலங்கையில் இதுவரையிருந்த தேசிய அரசியல் நீரோட்டம் திசைமாறலாம், கம்யூனிய சிந்தனை ஊற்றெடுத்து சீனத்தின் ஆதிக்கம் மேலோங்கலாம் என்ற கருதுகோள்கள் பூதாகரமாக வியாபித்துள்ள நிலையிலேயே, ஜனாதிபதியின் 'சீனாவுக்கான மூன்று நாள்கள்' உலக அரங்கில் வெகுவாக உற்றுநோக்கப்படுகின்றது.

இன்றைய உலகம் பண அலகுகளால் நெய்யப்பட்டு, வர்த்தகத்தால் இறுகப் பிணைக்கப்பட்டது. எனவே, ஒன்றில் ஒன்று சார்ந்திருப்பதும், தொடர்புகளைப் பேணுவதும் அவசியமானது. உக்ரைன் – ரஷ்ய மோதலால், ரஷ்ய எரிபொருள்களுக்கு அமெரிக்கா தடைகளை விதித்துள்ளது. ஆனால், இன்றும் ரஷ்ய எரிபொருள்கள் மேற்கு நாடுகளுக்கும் அமெரிக்காவுக்கும் சென்றுகொண்டிருக்கின்றன. ரஷ்யாவிலிருந்து இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு, இந்திய எரிபொருள்களாக அவை அமெரிக்காவை அடைகின்றன. இது ரஷ்யாவுக்கும் தெரியும், இந்தியாவுக்கும் தெரியும், அமெரிக்காவுக்கும் தெரியும், இவ்வளவு ஏன், அமெரிக்காவிலிருந்து எரிபொருளைப் பெறும் உக்ரைனுக்கும் தெரியும்.

21ஆம் நூற்றாண்டுக்கான வர்த்தகம் இவ்வாறிருக்கையில், ஜனாதிபதியின் சீனப் பயணத்தில் அச்சப்படவோ, ஆச்சரியப்படவோ ஒன்றுமேயில்லை. பிராந்திய நலன்களைக் காரணம்காட்டி தவிர்த்துக் கொள்ளும் விடயமும் இதுவல்ல. ஆனால், சீனாவுடனான ஒப்பந்தங்களின் போக்கை – அதன் தீவிரத் தன்மையை உய்த்துணர்ந்து நடந்துகொள்ளவேண்டியதும், காலச்சூழல்கள் மற்றும் புறச்சூழல்களைக் கருத்திற்கொண்டு கருத்துகளை வெளியிட வேண்டியதும்தான் இங்கே கோடுகாட்ட வேண்டிய விடயமாகும்.

அண்மையில், 'சீனாவின் ஒரு பகுதியே தாய்வான்' என்று இலங்கை அரசாங்கம் அறிவித்திருந்தது. சீனத்தின் விசுவாசத் தரப்புகள் ஏற்றுக்கொண்ட 'ஒரே சீனா' என்ற கொள்கையின் பாற்பட்ட அறிவிப்பு அது. இதற்கு முன்னரும் இதே கொள்கையுடன்தான் இலங்கை இருந்து வந்திருக்கின்றது. ஆனால், காலச்சூழல் கருதி வெளிப்படையான அறிவிப்புகளை தவிர்த்தே வந்தது. இதுதான் கடந்த அரசாங்கங்களின் இராஜதந்திரம். தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தவறுவிட்ட புள்ளியும் இதுதான். இங்கேதான், ஜனாதிபதியாக அநுர சீனாவுக்குச் செல்கின்றாரா? அல்லது 'விசுவாசமனநிலையுடன்' சீனாவுக்குச் செல்கின்றாரா? என்ற கேள்விகள் எழும்புகின்றன.

வெளிவிவகாரக் கொள்கைகள் எப்போதும் ஒன்றாய் இருப்பதில்லை. கடந்த வருடம்வரையில் 'சர்வதேச இரட்டையர்கள்' என்ற பெயரைப் பெற்றிருந்த அமெரிக்காவுக்கும் கனடாவுக்கும் இடையில் இப்போது ஆகப்பெரும் இடைவெளி விழுந்திருக்கின்றது. கனடாவுக்காக அதிகளவு பணத்தைச் செலவிட்டுள்ளோம். எனவே, கனடாவை அமெரிக்காவின் 51 ஆவது மாகாணமாக இணைக்கவேண்டும் என்று வலியுறுத்தியிருக்கின்றார் ட்ரம்ப். வெறும் அறிவிப்புடன் நின்றுவிடாமல், தாம் வழங்கிய நிதியுதவிகள் மூலம் அதற்கான நெருக்குவாரங்களையும் வழங்குவதற்கு அவர் தலைப்பட்டிருக்கின்றார். பெரும்பொருளாதார நாடான கனடாவுக்கே அந்த நிலையென்றால், இலங்கையெல்லாம் எத்தனை நாளுக்குத் தாக்குப்பிடிக்கும்? தொடர்புகள், உதவிகள் தேவை. ஆனால், நடுவில் ஒரு சுவர் எப்போதும் அவசியம். அது அரசுக்குப் புரியட்டும்.





# மீள ஆரம்பிக்கப்படும் வீட்டுத்திட்டங்கள்

**கொழும்பு, ஜன.14**
**கைவிடப்பட்டுள்ள 12 அரச வீட்டுத்திட்டங்களின் நிர்மாணப் பணிகளை மீள ஆரம்பிப்பதற்கு நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.**

நகர அபிவிருத்தி அதிகாரசபை, வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை உள்ளிட்ட பல நிறுவனங்களின் அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளது என்று அமைச்சின் செயலாளர் ரஞ்சித் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

இந்த வீட்டுத்திட்டங்களில் சுமார் 4 ஆயிரம் வீடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. சிக்கலுக்குள்ளான ஒப்பந்ததாரர்களுக்கு பதிலாக புதிய ஒப்பந்ததாரர்கள் மூலம் கட்டுமானப் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப் படவுள்ளன என்று அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். (எ-இ)



# எரிபொருள் வரியில் மாற்றமில்லை

கொழும்பு, ஜன.14
எரிபொருள்களுக்குத் தற்போது விதிக்கப்படும் வரியில் எந்தத் திருத்தத்தையும் செய்யாதிருப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.
நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை விடுத்துள்ளார். 2024ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் பெற்றோல் லீற்றர் ஒன்றுக்கு 72 ரூபாவும், ஓட்டோ டீசல் லீற்றர் ஒன்றுக்கு 50 ரூபாவும், சுப்பர் டீசல் லீற்றர் ஒன்றுக்கு 57 ரூபாவும் வரியாக அறவிடப்படுகின்றது.
இந்தவரியை கடந்த 11ஆம் திகதி நடைமுறையாகும்வகையில் தொடர்ச்சியாக மாற்றமின்றிப் பேணுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# சமூகங்களை மேம்படுத்த புதிய திட்டம் நடைமுறை

கொழும்பு, ஜன.14
குறைந்த வருமானம் கொண்ட சமூகங்களை மேம்படுத்துவதற்கான திட்டம் ஒன்றைச் செயற்படுத்த தற்போதைய அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் தலைமையில், கிராமப்புற மேம்பாடு, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் வழிகாட்டலின் கீழ் செயற்படுத்தப்படவுள்ள இந்தத் திட்டத்தின் முதல் கட்டம் 2025 இல் இருந்து 2027ஆம் ஆண்டுக்குள் செயல்படுத்தப்படும் என்றும், குறைந்த வருமானம் பெறுபவர்களைத் தேர்ந்தெடுப்பது மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் அதிகாரிகள் மற்றும் துணை நிறுவனங்களின் அரச அதிகாரிகளுக்கு தெளிவூட்டு வேலைத் திட்டம் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# ஹஜ் யாத்திரைக்கு 3,500 பேர்

கொழும்பு, ஜன.14
இந்த வருடத்துக்கான புனித ஹஜ் யாத்திரைக்காக 3 ஆயிரத்து 500 இலங்கையர்களை அனுப்புவதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.
சவுதி அரேபியா, ஜெட்டாவில் உள்ள அசிலா விருந்தகத்தில் வைத்து இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது என்று புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது. (எ-இ)

# மருந்துச்சோதனைக்கு பல ஆய்வகங்கள்!

கொழும்பு, ஜன.14
மருந்துகளைப் பரிசோதிக்கப் பல ஆய்வகங்களை உருவாக்குவது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது என்று சுகாதார அமைச்சின் செயலாளர் மருத்துவர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.
கறுப்புப் பட்டியலில் உள்ள ஒரு நிறுவனத்திடமிருந்து மருந்துகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன என்று முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விசாரணை நடத்த எதிர்பார்க்கின்றோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் தமிழர்களின் அடையாளம் கல்வியே!

## இந்தியத் துணைத்தூதுவர் சாய் முரளி தெரிவிப்பு

**யாழ்ப்பாணம்,ஜன.14**

**இலங்கைத் தமிழர்களின் அடையாளம் கல்வியே என்று யாழ் இந்தியத் துணைத்தூதுவராலயத்தின் துணைத்தூதுவர் சாய் முரளி தெரிவித்துள்ளார்.**

யாழ்ப்பாணம், சுழிபுரத்தில் மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்களை வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
கல்வி என்பது இந்த நாட்டின், இந்தப் பிரதேசத்தின், தமிழ் இனத்தின் மிகப்பெரிய சொத்தாக இருக்கின்றது. கல்வி மாணவர்களின் எதிர்காலத்தை உருவாக்குவதில் மிக முக்கியமான விடயமாகும். அவர்களுக்கான செயற்றிட்டங்கள் தொடர்ச்சியாக எம்மால் முன்னெடுக்கப்படும். இந்த உதவித்திட்டங்களை வழங்குவதில் நாங்கள் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறோம். தொடர்ச்சியாக எமது செயற்பாடுகள் உங்களை நோக்கி நகரும் . இவ்வாறான நிகழ்காலச் செயற்பாடுகள் ஒரு பலமான எதிர்காலத்தை உருவாக்கும். ஆங்கிலப் புத்தாண்டுகள் போல பல பண்டிகைகள் வந்தாலும் தமிழர்களின் அடையாளம், தமிழர்களின் கலாசாரம், தமிழ் பண்பாட்டுப் பாரம்பரியத்தின் ஒரு உயர்ந்த நிலையாகத் தைப்பொங்கல் விளங்குகிறது என்றார்.
(எ-33-125)



புங்குடுதீவுப் பகுதியில் உள்ள பாடசாலைகளில் கல்விபயிலும் மாணவர்களுக்கு 7 இலட்சத்து 25ஆயிரம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை வழங்கப்பட்டன. இந்த நிகழ்வு புங்குடுதீவு அம்பலவாணர் கலையரங்கில் நடைபெற்றது. (எ-33-27)

# வறுமையால் கல்வி தடைப்படக்கூடாது!

## சங்கானைப் பிரதேச செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.14
வறுமை காரணமாக மாணவர்களின் கல்வி இடைநிறுத்தப்படக்கூடாது. மாணவர்களின் கல்வி உரிமை பேணப்படவேண்டும் என்று தெரிவித்துள்ளார் சங்கானைப் பிரதேச செயலர்.
சங்கானைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மாணவர்களுக்குக் கற்றல் உபகரணம் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
சுபீட்சமான நாடு, வளமான வாழ்க்கை உங்களுக்குக் கிடைக்க வேண்டுமென்றால் இளம் சமுதாயம் கல்வியில் முன்னிலை பெறவேண்டும். வறுமை அல்லது வேறு ஏதும் காரணங்களால் மாணவர்களினுடைய கல்வி இடைநடுவே நிறுத்தப்படக்கூடாது. மாணவர்கள் தங்களுடைய கல்வியைத் தொடர்ந்து எதிர்காலத்தில் சிறந்த நிலையை அடையவேண்டும்-என்றார். (எ-33-125)

## பொங்கல் விழா!

யாழ்., ஜன. 14
ஆரிய திராவிட பாஷா அபிவிருத்தி சங்கத்தின் பொங்கல் விழா கல்வியங்காடு சங்கப் பணிமனையில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது. (ம-22)

# பொங்கல் விழா

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் பொங்கல் விழா இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணிக்கு நடைபெறவுள்ளது.
சங்கத்தின் செயலாளர் ம.மரியநாயகம் தலைமையில் நடைபெறவுள்ள விழாவில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனும், சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முதல்வர் சந்திரமௌலீசன் லலீசன், பற்சிகிச்சை நிபுணர் மருத்துவர் ஆர்.விசாகரூபன், யாழ். மனித உரிமை ஆணைக்குழு இணைப்பாளர் தங்கவேல் கனகராஜ் ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக மெய்கண்டான் மகா வித்தியாலய முன்னாள் ஆசிரியர் திருமதி தனபாலசிங்கம் தவமணி, இளவாலை திருமறைக்கலாமன்ற நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் செ.றொபின்சன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.
பொங்கலை முன்னிட்டு பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள் இன்று பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-25, 555)



இலங்கையில் உள்ள நிப்போன் கல்வி மற்றும் கலாசார மையத்தின் நிதி உதவியுடன் இலங்கை இராணுவ சமுக பராமரிப்பு சேவையினரால், பாடசாலை மாணவர்களுக்கு புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள 59 ஆவது படைப்பிரிவினர் அலுவலகத்தில் வைத்து நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. (எ-25,19)


## பொங்கல் பொதி கையளிப்பு



யாழ்ப்பாணம், ஜன.14
ஏ.ரி.சி. கல்வி நிறுவனத்தில் கல்விகற்று 1985 ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களால், தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்குப் பொங்கல் பொதிகள் வழங்கப்பட்டன. இந்தநிகழ்வு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இணுவில் ஏ.ரி.சி. கல்வி நிறுவனத்தில் இடம்பெற்றது. ஏ.ரி.சி. கல்வி நிறுவனத்தில் 1985 ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண தரத்தில் கல்விகற்றுப் புலம்பெயர் நாடுகளில் வசிக்கும் மாணவர்கள் இணைந்து தமது 56ஆவது அகவையை முன்னிட்டு பொங்கல் பொதிகளை வழங்கியுள்ளனர். (எ-33-27)


# மரண அறிவித்தல்

பிறப்பு 26 . 02 . 1955



இறப்பு 12 . 01 . 2025

**இராசையா இராசதுரை (ஓய்வு பெற்ற ஆசிரியர்)**

மந்துவிலைப் பிறப்பிடமாகவும் பத்தமேனி அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா இராசதுரை அவர்கள் கடந்த (12.01.2025) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா-இராசம்மா தம்பதியரின் பாசமிகு சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற ஆறுமுகம்-இரத்தினம் தம்பதியரின் மருமகனும் குகபாலினியின் (பாலினி) பாசமிகு கணவரும் கிரிசாந்தன் (பிரான்ஸ்), ரகுநாதன் (பிரான்ஸ்), பிரியா (பிரான்ஸ்), திவர்ணன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ரமேஷ்கண்ணா (பிரான்ஸ்), சாதுரி (பிரான்ஸ்), கிந்துஜா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற சரஸ்வதி, இராசலிங்கம் (பஞ்சன்-ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் அஸ்மிதா, அதியன், அய்ரா, அஸ்ஷன், அங்கஜன் ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்றவர்களான குகநேயன், குகதாசன் (சிவம்) மற்றும் குகநாதன் (கனடா), குகசீலன் (கனடா), குகநாயகி (கனடா), குகமதி (கனடா), குகரஞ்சினி (ரூபபி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கியைகள் நாளை (15.01.2025) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் பத்தமேனியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பத்தமேனி தீத்தாங்குளம்இந்து மயானத்திற்கு நண்பகல் 12.00 மணியளவில் எடுத்துச் செல்லப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

விமான நிலைய வீதி,
பத்தமேனி,
அச்சுவேலி.

தகவல்:
குடும்பத்தினர்.
077 894 2087
076 607 5863

(CR 44101) P-1


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இலத்திரனியல் சிகரெட்டுகளுடன் பெண் கைது

கொழும்பு,ஜன.14
சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட 60 இலட்சம் ரூபா பெறுமதியான இலத்திரனியல் சிகரெட்டுகளுடன் பெண் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பிலியந்தலைப் பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயதுடைய பெண்ணொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். மலேசியாவிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த, சந்தேகநபர் விமான நிலையத்தை விட்டு வெளியேற முயன்றபோது விமான நிலையப் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரால் சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் கொண்டுவந்த பயணப்பொதிகளிலிருந்து 455 இலத்திரனியல் சிகரெட்டுகள் கைப்பற்றப்பட்டதை அடுத்து அவர் கைது செய்யப்பட்டுள்ளார். (எ-33)

## கைதிகளுக்கு உணவு வழங்க அனுமதி

கொழும்பு.ஜன.14
தைப்பொங்கலை முன்னிட்டு பொங்கல் தினத்தன்று இந்துமதத்தைச் சேர்ந்த சிறைக்கைதிகளுக்கு உறவினர்கள் உணவுப்பண்டங்களை வழங்கலாம் எனச் சிறைச்சாலை ஆணையாளர் நாயகமும் ஊடகப் பேச்சாளருமான திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கையிலுள்ள அனைத்துச் சிறைகளுக்கும் உணவுப்பொருள்களை எடுத்துச்செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றும், உணவுப் பண்டங்களை எடுத்துச் செல்வோர் உரிய சுகாதார, பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும் எனவும் அவர் அறிவுறுத்தியுள்ளார். (எ-33-6)

---

கொழும்புத்துறை மேற்கு சுவாமியார் வீதியைச் சேர்ந்த அமரர் கனகாம்பிகை வைத்தியநாதனின் ஞாபகார்த்தமாக கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த 20 மாணவர்களுக்கு பாதணிகள் வழங்கப்பட்டுள்ளன. வித்தியாலய அதிபர் கே.தவகீஸ்வரன் தலைமையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்வில், பழைய மாணவர் சங்கசெயலாளர் யா.சாந்தகுமார் பாதணிகளை வழங்கினார். (எ-40-17)









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லாறுப் பிரதேசத்தில் சட்டவிரோத மண் அகழ்வு

## தடுத்து நிறுத்துமாறு மக்கள் கோரிக்கை

**கிளிநொச்சி, ஜன.14**

**கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கல்லாறுப் பகுதியில் தொடர்ச்சியாகச் சட்டவிரோத மணல் அகழ்வு நடைபெறுகின்றது என்று பிரதேச மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.**

அந்தப் பகுதியில் சட்டவிரோதமான மணல் அகழ்வு இரவிலும், பகலிலும் நடைபெறுகின்றது. இயற்கை வளங்கள் அழிக்கப்படுகின்றன. ஆயினும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதுதொடர்பில் அசமந்தப் போக்குடன் உள்ளனர் என்று மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். சட்டவிரோதமாக மணல் அகழ்ந்து செல்லும் வாகனங்களால் வீதிகளும் சேதமாகியுள்ளன என்று தெரிவித்துள்ள மக்கள், அந்த வீதிகள் இப்போது போக்குவரத்துச் செய்ய முடியாதவாறு குண்டும், குழியுமாக உள்ளது என்றும், மாணவர்கள் முதல் பலரும் போக்குவரத்துச் செய்வதில் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர் என்றும் தெரிவித்துள்ளனர். இதுதொடர்பாக உரிய நடவடிக்கை எடுத்துச் சட்டவிரோத மணல் அகழ்வைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஏ-113)



# கணபதி அறக்கட்டளை ஆண்டு நிறைவு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜன.14

கணபதி அறக்கட்டளையின் நான்காம் ஆண்டு நிறைவுநாள் நிகழ்வு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை சந்திப் பிள்ளையார் திருமண மண்டபத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வு கணபதி அறக்கட்டளை நிர்வாகியும், ஸ்தாபகருமான கணபதிப்பிள்ளை கணேசலிங்கம் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் வெளிநாட்டில் நடைபெற்ற 19 வயதுப் பிரிவின் கீழ் துடுப்பாட்டத்தில் சாதனை படைத்த பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவன் விக்னேஸ்வரன் ஆகாஸ் "தங்கமகன்" விருது வழங்கிக்கௌரவிக்கப்பட்டார். தெரிவுசெய்யப்பட்ட 600 மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களும், 10 மாணவர்களுக்குத் துவிச்சக்கர வண்டிகளும், பல்கலைக்கழகத்துக்குத் தெரிவான 2 மாணவர்களுக்கு மடிக்கணினிகளும் வழங்கப்பட்டன. நிகழ்வில் கணபதி அறக்கட்டளை நிறுவன நிர்வாகிகள், பயனாளிகள், பிரதேச செயலகங்களின் உத்தியோகத்தர்கள், பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஏ-33-27)

# நெற்கொள்வனவு செய்யவுள்ள வவுனியா ப.நோ.கூ. சங்கம்!

வவுனியா, ஜன.14

காய்ந்த நெல் கிலோ 125 ரூபா வீதமும், காயாத நெல் கிலோ 115 ரூபா வீதமும் கொள்வனவு செய்வதற்கு வவுனியா பலநோக்கு கூட்டுறவு சங்கம் தீர்மானித்துள்ளது என்று சங்கத்தின் தலைவர் ந. ஸ்ரீஸ்கந்தராஜா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது

பொங்கல் தினத்துக்குப் பின்னர் வவுனியா பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் நெல் கொள்வனவு செய்யவுள்ளது. விவசாயிகள் நெல்லை வழங்க விரும்பினால் ஓமந்தை, ஆறுமுகத்தான்புதுக்குளம், கல்நாட்டியகுளம், சச்சங்குளம் ஆகிய பகுதிகளில் உள்ள பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் களஞ்சியசாலைகளில் நெல்லைக் கையளிக்க முடியும்.

வவுனியாவின் சங்கத்துக்குரிய கட்டடங்களிலும் நெல்லை களஞ்சியப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதால் சுமார் 2 ஆயிரத்து 700 மெட்ரிக்தொன்னுக்கும் அதிகமான நெல்லை இந்த முறை வவுனியா பலநோக்கு கூட்டுறவு சங்கம் கொள்வனவு செய்வதற்கு தீர்மானித்துள்ளதுஎன்றார். (ஏ-25-110)

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜன. 14

யாழ். நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தின் வாராந்தச் சுக்கிரவாரக் கந்தபுராண படனத் தொடர் 9 சிறப்புச் சொற்பொழிவு, சிவநெறிப் பிரகாசர், சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் ஆலய சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. இளஞ்சைவப்புலவர், பிரசங்க வாரிதி ச.நவநீதன் "கணங்கள் செல்டலம்"எனும்விடயப்பொருளில் சிறப்புச்சொற்பொழிவாற்று வார். சொற்பொழிவில் இருந்து நீர்வைக் கந்தன் புராண இதிகாசப் பாடசாலை மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (ஏ-25)



# சட்டவிரோதமான பாலைமர தீராந்திகளை வைத்திருந்தவர் கைது!

சட்டவிரோதமாகத் தறிக்கப்பட்ட பாலைமரக் குற்றிகளைத் தீராந்திகளாக உருமாற்றி உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் முல்லைத்தீவு, குமிழமுனையில் சந்தேகநபர் ஒருவர் வனவளப்பாதுகாப்புத் திணைக்கத்தினரால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார். வனவளப்பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். சம்பவ இடத்துக்கு விசேட அதிரடிப்படையினருடன் சென்ற வனவளப் பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகள், 8 லட்சம் ரூபா பெறுமதியான 48 பாலைமரத் தீராந்திகளைக் கைப்பற்றியுள்ளனர். கைது செய்யப்பட்டவருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்வதற்குரிய நடவடிக்கைகள் முனைக்கெடுக்கப்படுகின்றது என்று அதிகாரிகள் தெரிவித்தனர். (ஏ-33-125)



# மாணவர் கௌரவிப்பு

கொடிகாமம், ஜன.14

மீசாலை வடக்கு நளினி முன்பள்ளியின் கலை நிகழ்வுகளும் தரம் ஒன்றுக்குச் செல்லும் மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வும் கடந்த சனிக்கிழமை மு.ப 9.30 மணிக்கு நளினி முன்பள்ளியில் நடைபெற்றது. மீசாலை வடக்கு முன்பள்ளித் தலைவர் திருமதி ச.அபிரா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராகத் தென்மராட்சிக் கல்விவலய ஓய்வுநிலை முன்பள்ளி உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி சறோஜாதேவியும், சிறப்பு விருந்தினர்களாக பனை தென்னைவள அபிவிருத்தி நிலையக் கொத்தணி முகாமையாளர் க. அருட்செல்வன், மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி ஆசிரியர் க. சிவகுமார், மந்துவில் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் தெ. கலைவாசன் ஆகியோரும், கௌரவ விருந்தினராக மீசாலை வடக்கு அபிவிருத்திக் குழு ஆலோசகர் க.உதயகுமாரும் கலந்து கொண்டனர். மாணவர்களின் கலைநிகழ்வுகள் இடம்பெற்றதுடன், மாணவர்களுக்குப் பரிசில்களும் சின்னங்களும் என்பன வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். (ஏ-33-33)

# திருவாசக சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜன. 14

சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாகச் சிவநெறிப் பிரகாசர் சமய ஜோதி கதிர்காமன் நிஜலிங்கத் தின் ஒழுங்கமைப்பில் வாராந்தத் திருவாசகச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் 40, சிறுப்பிட்டி மேற்கு அருள்மிகு ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயப் பிரதான மண்டபத்தில் எதிர்வரும் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம் பெறவுள்ளது. சைவப்புலவர் பிரசங்க பூஷணம் செ. த. குமரன் "மாணிக்கவாசகரும் குலாப்பத்தும்" எனும் விடயப்பொருளில் சொற்பொழிவாற்றவுள்ளார். சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (ஏ-25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ மதுரகவி காரை. எம்.பி. அருளானந்தன்

# தமிழர் பண்டிகைகளில் தலையாய திருவிழா தைப்பொங்கல்





வருடத்திலே முதலாவது மாதமான தைமாதத்தின் முதல் தேதியை மகர சங்கிராந்தி என்பர். உத்தராயணம் ஆரம்பிக்கும் நாளும் அதுவே. தென் திசையிலிருந்து வடக்கு நோக்கி சூரியன் திரும்புவதை உத்தராயணம் குறிக்கும். தைமுதல் ஆவணி ஈறாகவுள்ள ஆறு மாதங்களைக் கொண்ட உத்தராயணம் புண்ணிய காலம் என்றும், சுபகருமங்கள் மங்கள காரியங்கள் நிகழுகின்ற காலம் என்றும் கொள்ளப்படுகின்றது. உழைப்பின் உயர்வை உழவர்களின் மேன்மையை மதிக்கும் விழாவாகவும் தைப் பொங்கல் விழா தொன்று தொட்டு வழங்கிவருகின்றது. மனித உழைப்பாளிகளுடன் விலங்கு உழைப்பாளிகளையும் நினைத்து நேசித்து நன்றி செலுத்தும் பெருநாளாகவும் தைப் பொங்கல் பண்டிகை விளங்குகிறது.

**பொங்கல் செய்யும் வீட்டு முற்றம்**

பொங்கல் திருநாளில் சூரியன் உதிப்பதற்கு ஐந்து நாழிகைக்கு முன்னர் அதிகாலையில் மக்கள் நித்திரை விட்டு எழுந்து நீராடி தம்மைத் தூய்மைப்படுத்திவிட்டு முற்றத்தில் சாணத்தினால் மெழுகப்பட்ட நீள் சதுரமான பகுதியை வெள்ளை, சிவப்பு நிறமாவினால் அழகிய கோலமிட்டு மண்டபமாக வடிவமைத்துக்கொள்வர்.

மலைவாழை, கமுகு, கரும்பு மகர தோரணங்கள், மலர்கள் என்பவற்றால் அலங்கரிப்பர்.

அதனுள் அழகிய கோலங்களையும் கலைத்திறன் மிளிரப் போடுவர். பிள்ளையார் பிடித்துவைத்து, குத்து விளக்கேற்றி பூரணகும்பம் வைத்து பழங்கள், வெற்றிலை, பாக்கு, தேங்காய் முதலிய மங்கலப் பொருள்களை நிவேதிப்பர். விநாயகனை முதலில் நினைத்து இஷ்ட தெய்வங்களைப் பிரார்த்திப்பர். (14 ஆம் பக்கம் பார்க்க)

அனைவருக்கும் இனிய தைப்பொங்கள் நல்வாழ்த்துக்கள்

உதயா
ஜுவல்லர்ஸ்







22 கரட் தங்க நகைகள்
ஓடருக்கு உத்தரவாதத்துடன்
செய்துகொடுக்கப்படும்.

அழகிய தங்க நகைகளுக்கு
நீங்கள் நாடவேண்டிய
ஒரே இடம்...



79G கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

Email-uthayaa Jewellerss@gmail.com
Facebook - uthayaa Jewellerss
T.P. No - 074 069 4449 / 021 222 4434

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்...

(11)ஆம் பக்கத் தொடர்ச்சி)

நீரினால் சுத்தம் செய்யப்பட்ட புதுப்பானையைக் திருவணையில் வைத்து அதன் வாய்ப்குதியில் மஞ்சள் இலை, இஞ்சியிலை, மாவிலை ஆகியவற்றைப் பொருத்திக்கட்டி பானையின் மேற்புறத்தில் திருநீற்றைக் குழைத்துக் திரிபுண்டரமாக மூன்று இடங்களில் பூசி, சந்தனம், குங்குமம் திலகமிட்டு பானைக்குள் பசும் பாலும் நீரும் விட்டு நிரப்புவர். கற்பூரத் தீபத்தினால் அடுப்பில் நெருப்பைப் பற்ற வைத்து கணவனும் மனைவியும் ஒருமித்த சிந்தையராய் சூரியனை வணங்கி இஷ்ட தெய்வங்களை நினைத்து பானையைப் பக்குவமாய் இருவரும் பிடித்துத் தூக்கி அடுப்பில் ஏற்றுவர்.

**"பொங்கலோ பொங்கல்"**

பானையில் பால் பொங்கி எழும்போது "பொங்கலோ பொங்கல்" என்று கூவி மகிழ்வர் தம்முடைய வாழ்வில் இன்பம் பொங்கப் போவதை உணர்த்தும் அறிகுறியாகப் பால் பொங்கி ஓங்கி எழுதலைக் கண்டு அவர்களின் மனமும் பொங்கிப் பூரிக்கும். பால் பொங்கி வடக்கு முகமாகவேனும், கிழக்கு முகமாக வேனும், ஈசானத்தை நோக்கியேனும் முதலில் சரிந்து வெளித்தள்ளினால் அதனை நன் நிமிர்த்தமாகக் கருதிப் புளகாங்கிதம் கொள்வர் அதன்பின்னர் குடும்பத் தலைவர் புதுநெல்லில் குற்றியெடுத்த பச்சையரிசியைதம் இரு கைகளாலும் பானையில் வாய் விளிம்பினை மும்முறை சுற்றிப்பானையுள் இடுவார்

தொடர்ந்து குடும்பத்தலைவி, குடும்பபெரியோர்கள், பிள்ளைகள் என்போர் அரிசியைப் பானையில் இட்டு பொங்கல் பெருவிழாவை சூரியனுக்கு நிறைவேற்றி மகிழ்வர். பொங்கல் அமுதினை மூன்று தலைவாழையிலைகளில் படைத்து பழங்கள், கரும்பு, செவ்விளநீர், மலர்கள் முதலியவற்றைக் கொண்டு மடைபரவி தேங்காய் உடைத்து வைத்து நீரும் மலரும் கொண்டு அர்ச்சித்துத் தூபதீபம் காட்டி, பக்தி சிரத்தையோடு திருமுறைகளைப் பாராயணம் செய்து சூரிய பகவானை வணங்கி வழிபாடு செய்வர். இன்னார் இனியார் உயர்வு, தாழ்வு என்னும் பேதங்களின்றி ஒரேவிதமாக எல்லோருக்கும் அவற்றை வழங்கும் சூரியனுக்கு நன்றி தெரிவிக்கும் முகமாகத் தைமுதல்நாளில் பொங்கல் விழாக் கொண்டாடுவது தமிழ் மக்களின் நயத்தக்க நாகரிகத்தையும் உயர் பண்பாட்டையும் காட்டுகின்றது. ஆகவே தைப்பொங்கல் இன்ப பொங்கலாக, மகிழ்ச்சிப் பொங்கலாக, சர்வமங்களப் பொங்கலாக அமைய வேண்டி இறைவனைப் பிரார்த்திப்போ மாக, தை பிறந்தால் வழி பிறக்கும் எனும் நம்பிக்கை நிஜமாக மலரட்டும்.










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைவர் வாழ்விலும் இன்பமுண்டாகட்டும்



இன்று மங்கலச்சிறப்புடன் தைப்பொங்கல் மலர்ந்துள்ளது. ஓர் இனத்தின் அல்லது ஒரு குழுவினருடைய பண்பாட்டினையும் கலாசார விழுமியங்களையும் தொன்மையையும் அவர்கள் கடைப்பிடித்துவரும் விழாக்கள் பண்டிகைகள் ஊடாக நாம் அறிந்துகொள்ளமுடியும்.

பொங்கல் திருநாள் தமிழர்களின் நன்றி மறவாமைப் பண்பினையும் பிரதானமாக எடுத்துக்காட்டுகின்றது.

பல்வேறு சிறப்புகளைத் தன்னகத்தேயுடைய தமிழ் மக்கள் பல இன்னல்களை, துன்பங்களைச் சுமந்தவர்களாவே காணப்படுகிறார்கள். தற்காலத்தில் எமது இளம் சமுதாயத்தில் பல்வேறு பிறழ்வுகளை காண்பது வேதனையே.

இவற்றிலிருந்து நாம் மீண்டு உயர்வு பெற இறை பிரார்த்தனையுடன் தன்னம்பிக்கையும் அவசியமாகும். இறைவழி பாட்டையும் திருமுறைகளின் உயர்வினையும் எமது இளம் சமூகத்தினருக்கு அதிகம் வழங்குவோம்.

இனியவை நடக்க வேண்டும். ஒவ்வொருவர் வாழ்விலும் இன்பமுண்டாகட்டும். சுப மங்களம் உண்டாகட்டும் என இந்துக் குருமார் அமைப்பின் சார்பில் பகிர்ந்து மகிழ்ச்சி அடைகிறோம்.

"சிவாகம கலாநிதி" சிவஸ்ரீ
கு.வை.க. வைத்தீஸ்வரக்குருக்கள்
தலைவர், இந்துக்குருமார் அமைப்பு.

சிவஸ்ரீ. ச. சாந்தரூப குருக்கள்
செயலாளர், இந்துக்குருமார் அமைப்பு.

# நல்லனவற்றைச் செய்வோம்



சூரியபகவான் சிவசூரியன் என்கின்ற நாமத்தோடு மகர ராசிக்குள் பிரவேசிக்கின்ற நாள் தைப்பொங்கல் ஆகும். உத்தராயனகாலம் ஆரம்பிக்கின்ற நாளும் இதுவே. ஆகையால் இந்த நாளிலே ஆலயங்களில் விசேட வழிபாடுகள் நடைபெறுவது வழக்கமாக இருக்கிறது. இந்நாளில் அனைவருக்கும் தைப்பொங்கல் வாழ்த்துகளைத் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றோம்.

தைப்பொங்கல் தினத்தில் சூரியபகவானுக்கு நன்றி தெரிவிக்கும் முகமாகபொங்கல் செய்து அவனுக்கு நிவேதித்து வழிபடுகின்ற மரபு எமக்கு உண்டு. சூரியபகவானுடைய அருட்கடாட்ஷம் கிடையாது விட்டால் உலகமே இருண்டுவிடும். இந்த உண்மையை உணர்ந்த தமிழர்கள் அவனுக்கு நன்றி தெரிவிக்கவேண்டும் என்ற உணர்வோடு இந்தப் பண்டிகையைக் கொண்டாடுகிறார்கள்.

தைப்பொங்கலுக்கு மறுநாள் உழவுத் தொழிலுக்கு உதவுகின்ற மாடுகளுக்குப் பொங்கலிட்டு நன்றி தெரிவித்துவழிபடுகின்ற பெருமை நம்மவருக்கு உண்டு.

இத்தகைய பெருமைபெற்ற இந்தப் பண்டிகையில் நல்லவற்றை நினைக்கவும், நல்லவற்றைச் செயற்படுத்தவும் எமக்கு எல்லாம் வல்ல ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீமத்க நடராஜப் பெருமானுடைய திருவருள் அபரிமிதமாகச் சொரியவேண்டும் என்று அப்பரம் பொருளைத் தியானித்து எமது நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஈசான சிவசக்திகிரீவன்
தலைவர்
இந்துசமயப் பேரவை.











Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



யாழ்.நல்லூர் சிவன் கோவில் தேர்த்திருவிழா நேற்றுத் திங்கட்கிழமை பக்திபூர்வமாக இடம்பெற்றது. (எ-25)





தைப்பொங்கலை முன்னிட்டு யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத்தின் கோரிக்கைக்கு அமைவாகச் சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தால் பொங்கல் அரிசி வழங்கப்பட்டது. சங்கத்தின் தலைவர் யோ.சுதாகரன் தலைமையில் சங்கத்தின் யாழ்ப்பாணத் தலைமை அலுவலகத்தில் கடந்த சனிக்கிழமை 320 விழிப்புலனற்ற குடும்பங்களுக்கு ஐந்து லட்சம் ரூபா பெறுமதியான தலா ஐந்து கிலோ அரிசி வழங்கப்பட்டது. (எ-25,66)





# கும்பாபிஷேக மலர் வெளியீடு

முல்லைத்தீவு, ஜன.14

முல்லைத்தீவு, முள்ளியவளைக் கிராமத்தில் உள்ள காட்டுவிநாயகர் ஆலயத்தின் மஹாகும்பாபிஷேகச் சிறப்பு மலரான, 'காட்டு விநாயகம்' எனும் நூல் ஆலயத் தலைவர் த.பரஞ்சோதி தலைமையில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை வெளியிடப்பட்டது. இந்த நூலை ஸ்ரீமதி ஹேமா சண்முக சர்மா தொகுத்துள்ளார். நிகழ்வின் பிரதம விருந்தினராக முல்லைத்தீவு மாவட்டச் செயலக ஓய்வு நிலைப் பிரதம கணக்காளர் ம.செல்வரட்ணமும், சிறப்பு விருந்தினராக வன்னிமா வட்ட நாடாளுமன்ற உறுப்பினர் து.ரவிகரனும், கௌரவ விருந்தினர்களாக நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ச.கனகரத்தினம், பேராசிரியர் கணேசலிங்கம், ஆலயப் பிரதம குரு சிவசிறீ காத்திகேய இரகுநாதக்குருக்கள் ஆகியோரும் கலந்துகொண்டனர். விருந்தினர்கள் நூலை வெளியிட்டுவைக்க முதற்பிரதியை வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் ஆலயத்தின் தலைவரும் தொழிலதிபருமான குமாரையா மகேந்திரன் பெற்றுக்கொண்டார். (எ-25.19)



# யாழ்ப்பாணம் – மாத்தளை புரிந்துணர்வு நிகழ்ச்சித்திட்டம்!

யாழ்ப்பாணம், ஜன. 14

பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தேசிய மொழிகள் பிரிவின் ஏற்பாட்டில், மொழிகளினூடாகக் கலாசார ஒருங்கிணைப்பை வளர்த்தல் மற்றும் மக்கள் குழுக்களிடையே புரிந்துணர்வைப் பலப்படுத்தல் எனும் நிகழ்ச்சித்திட்டம் யாழ்ப்பாணப் பிரதேச செயலகத்தில் அண்மையில் இடம்பெற்றது. இதன்போது மாத்தளைப் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் யாழ்ப்பாண பிரதேச செயலகத்திற்கு களவிஜயம் மேற்கொண்டனர். (ச-22,159)



# யாழ்.பல்கலைக்கழக மாணவர்களின் திருவெம்பாவைப் பாராயணம் நிறைவு

யாழ்ப்பாணம், ஜன.14

யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் கடந்த சனிக்கிழமை முதல் முன்னெடுக்கப்பட்டு வந்த திருவெம்பாவைப் பாராயணம், மாணிக்கவாசகர் திருவீதியுலாவுடன் நேற்றுத் திங்கட்கிழமை நிறைவுபெற்றது. பாராயணத்தில் யாழ். இந்துமன்றப் பெரும் பொருளாளரும் சிரேஸ்ட விரிவுரையாளருமான சி.ரமணராஜா, விஞ்ஞான பீடப் பேராசிரியர் ஜங்கரன் மற்றும் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (எ-25,125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரகர்களிடமிருந்து விவசாயிகளை காப்பாற்றுவதற்கு நடவடிக்கை

## வடக்கு ஆளுநர் தெரிவிப்பு


**யாழ்ப்பாணம், ஜன.14**

**இடைத்தரகர்களிடமிருந்து விவசாயிகள் காப்பாற்றப்படவேண்டும். விவசாயிகளின் உற்பத்திப் பொருள்களுக்கு நியாயமான சந்தைவிலை கிடைக்கவேண்டும். அதற்கு ஏற்றவகையில் பொருளாதார மத்திய நிலையங்களை இந்த ஆண்டு மீளத் திறப்பதற்கு திட்டமிட்டு வருகின்றோம். இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அவர்கள் தெரிவித்துள்ளார்.**

மறவன்புலோ கமக்கார அமைப்பின் ஏற்பாட்டில் நெல் அறுவடை விழாவும் கமக்காரர் கௌரவிப்பு நிகழ்வும் மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயத்தில் நேற்றுத் திங்கட்கிழமை நடைபெற்றது. அதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே வடக்கு ஆளுநர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது தற்போதைய காலநிலை மாற்றம் விவசாயிகளுக்கு பெரும் சவாலாக மாறியிருக்கின்றது. முன்னைய காலங்களில் நெல் அறுவடையின் போது மழை பெய்வதில்லை. ஆனால் இப்போது மழையின் பாதிப்பை நாம் எதிர்கொண்டிருக்கின்றோம். நெல் அறுவடை முடிந்த பின்னர் சிறுதானியங்களை பயிரிடுங்கள். அதற்கான விதைகளை வழங்குவதற்கு விவசாயத் திணைக்களம், பிரதம செயலர் ஊடாக நடவடிக்கை எடுத்துள்ளது. வடக்கின் ஏனைய 4 மாவட்டங்களும் குளத்தை நம்பி இருபோகத்தை மேற்கொள்கின்றன.

எமது மண்ணின் தன்மைக்கு ஏற்பவும், எந்தப் பயிரை உற்பத்தி செய்தால் ஏற்றுமதி செய்யலாம் என்பதையும் ஆராய்ந்து அதற்கு ஏற்ப விவசாய நடவடிக்கைகளை எதிர்காலத்தில் முன்னெடுக்கவேண்டும். அதற்கு விவசாயத் திணைக்களம் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படும். எங்கள் இளையோர்கள் விவசாயத்தில் இறங்கினால் நாம் உற்பத்தியில் சிறப்பான இடத்தைப்பெற முடியும்என்றார். (எ-இ)



# கடற்கரையில் ஒதுங்கிய கண்ணன் ராதை சிலை

யாழ்ப்பாணம், ஜன.14

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு, வத்திராயன் கடற்கரை பகுதியில் கண்ணன் ராதை இணைந்த சிலை ஒன்று கரையொதுங்கியுள்ளது.

இந்தச் சிலை இந்தோனேசியா, மலேசியா அல்லது இந்தியா போன்ற ஏதாவது ஒரு நாட்டில் இருந்து வந்திருக்கலாம் என்று நம்பப்படுகின்றது. இந்தச் சிலையை மக்கள் திரண்டு பார்வையிட்டுச் செல்கின்றனர். (எ-27)

# மீனவர் பிரச்சினைகளைப் பேசாது செல்பி எடுக்கும் தமிழ் எம்.பிக்கள்

## *மீனவ சங்கங்களின் சமாசங்களின் சம்மேளனம் விசனம்*

யாழ்ப்பாணம், ஜன.14

தமிழக முதலமைச்சருடன் ஒளிப்படம் எடுப்பதற்கு முண்டியடித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் வடக்கு மீனவர்களின் பிரச்சினையைப் பேசத் தயங்குவது ஏன் என்று கேள்வி எழுப்பியுள்ளார் யாழ்ப்பாணம் மாவட்ட மீனவ சங்கங்களின் சமாசங்களின் சம்மேளனத்தின் உப தலைவர் ரட்ணகுமார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

இலங்கை மீனவர்களது பிரச்சினைகள் தொடர்கதையாகவே உள்ளது. இலங்கை மீனவர்களின் வலைகள் மற்றும் தொழில் முதல்கள் இந்திய இழுவைப் படகுகளால் அழிக்தப்படுகின்றன. தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், இந்திய மீனவர்கள் வாழ்வாதாரத்துக்காக மீன்பிடியில் ஈடுபடும்போது இலங்கை கடற்படை கைது செய்துள்ளது என்று கூறுகின்றார். இந்தக் கருத்து பிழையானது என்றுகூட எங்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழக முதலமைச்சரிடம் சுட்டிக்காட்டவில்லை.

கடற்றொழில் அமைச்சரும் தமிழ்நாட்டுக்குச் சென்றுள்ளார் என்று அறியமுடிகின்றது. அவர்கூட மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பாகப் பேசியதாக ஊடகங்களில் எந்தத்தகவலும் வெளியாகவில்லை. தமிழக முதலமைச்சரிடம் இது தொடர்பாகப் பேசுவதற்கு நீங்கள் அச்சப்படலாம். ஆனால் அங்குள்ள ஊடகங்களிலாவது எமது மீனவர்களின் பிரச்சினைகளை வெளிப்படுத்துங்கள். எங்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதைக் கூறுங்கள். அதையாவது செய்துவிட்டு வாருங்கள் என்றார். (எ-27)



# பொங்கல் பொதி கையளிப்பு

யாழ்ப்பாணம், ஜன.14

தைப்பொங்கலை முன்னிட்டு இலங்கை மேல்மருவத்தூர் அருள்மிகு ஆதிபராசக்தி சித்தர் பீடம் கல்வி சமூகநலம் பண்பாட்டு அறப்பணிமையத்தின் ஏற்பாட்டில், நல்லூர் வடக்கு சந்திரசேகரப் பிள்ளையார் கோவில் கலாசார மண்டபத்தில் வைத்து நேற்றுதிங்கட்கிழமை பொங்கல் பொதிகள் வழங்கப்பட்டன.


நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திரசேகர பிள்ளையார் ஆலய அறங்காவற்குழு தலைவர் சி.வி.கே சிவஞானம் தலைமையில், ஆலய அறங்காவல் குழு உறுப்பினர்கள் மற்றும் மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சக்தி பீடத்தினர் இணைந்து 108 குடும்பங்களுக்கு பொங்கல் பொதிகளை வழங்கினர். (எ-25,20)



# ஔவையாரின் நினைவுதினம்

வவுனியா, ஜன.14

ஔவையாரின் நினைவு தினம் வவுனியா நகரசபையின் ஏற்பாட்டில், தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் சந்திரகுமார் கண்ணன் தலைமையில் வவுனியா, சின்னப்பு துக்குளம், மாமடுவ சந்தியிலுள்ள ஔவையாரின் சிலையடியில் நேற்றுத்திங்கட்கிழமை கடைப்பிடிக்கப்பட்டது. நிகழ்வில் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் எனபலரும் கலந்துகொண்டிருந்தனர். ஔவையாரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது. மாணவர்களால் நினைவுப் பேருரைகளும் நிகழ்த்தப்பட்டன. (ச-25,110)



# விழிப்புணர்வுக் கருத்தரங்கு!

பொருளாதாரத்தில் நலிவுற்ற மக்களை வலுவூட்டும் செயற்றிட்டம் தொடர்பில் உத்தியோகத்தர்களுக்கு விளக்கமளிக்கும் விழிப்புணர்வுக் கருத்தரங்கு யாழ்ப்பாணப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில், கரவெட்டிப் பிரதேச செயலக சமுர்த்தித் தலைமையக முகாமையாளர் ஆர். அன்ரனி வளவாளராகக் கலந்துகொண்டு கருத்துரை வழங்கினார். (ச-22,159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீராவியடி பிள்ளையார் ஆலயத்தில் தைப்பொங்கல் சிறப்பு வழிபாடுகள்

முல்லைத்தீவு, ஜன.14

**முல்லைத்தீவு பழைய செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தில் வருடாந்தம் தைத்திருநாளை முன்னிட்டு இடம்பெறும் விசேட பூசை வழிபாடுகள் நேற்று மிகச் சிறப்பாக இடம்பெற்றன.**



நீராவியடிப் பிள்ளையாருக்கு விசேட அபிஷேக பூசைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், பிள்ளையாருக்கு குழை சோறு படையலிட்டு மிகச் சிறப்பாக வழிபாடுகள் இடம்பெற்றன. இந்த வழிபாடுகளில் செம்மலை மற்றும், செம்மலை கிழக்கு கிராம மக்கள், அடியவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர். இந்த விசேட பூசை வழிபாடுகளில் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனும் பங்கேற்றிருந்தார்.

கடந்த காலங்களில் குறித்த நீராவியடிப் பிள்ளையார் ஆலய வளாகத்தை ஆக்கிரமிப்புச் செய்வதற்கு பெரும்பாண்மையினத்தைச் சார்ந்தவர்கள் முயற்சிகளை மேற்கொண்டதுடன், ஆலயத்தில் தமிழ் மக்கள் வழிபாடுகளை மேற்கொள்வதற்கு பல்வேறு இடையூறுகள் ஏற்படுத்தியிருந்தனர். ஆலய நிர்வாகத்தினர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் ஆகியோரின் தொடர் போராட்டத்தையடுத்து, நீதிமன்ற உத்தரவிற்கமைய தற்போது தமிழ் மக்கள் இவ்வாலயத்தில் சுமூகமாக வழிபாடுகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-19)

# மாற்றத்தை ஏற்படுத்த பிரிட்டன் துணைநிற்கும்

## இலங்கைக்கான தூதுவர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன.14

இலங்கையின் தற்போதைய அரசாங்கம் எத்தகைய மாற்றத்தை ஏற்படுத்துவதாகக்கூறி ஆட்சிபீடமேறியதோ, அந்த மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு அவசியமான சகல ஒத்துழைப்புக்களையும் வழங்குவதற்கு பிரிட்டன் தயாராக உள்ளது என்று இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் அன்ட்ரூ பற்றிக் தெரிவித்துள்ளார். தற்போதைய அரசாங்கம் பெரும்பான்மைப்பலத்தைப் பெற்றுள்ளது என்றும், அவர்களுக்கு உதவுவதற்கு சர்வதேச சமூகம் தயாராக இருக்கின்றது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

'சர்வோதயம்' அமைப்பால் கடந்த வார இறுதியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விருது வழங்கல் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (எ-இ)

# 100 சதவீதப் பெண்களின் பங்களிப்புடன் ஹோட்டல்

கொழும்பு, ஜன.14

தம்புள்ள கண்டலம பகுதியில் 100 சதவீதம் பெண் ஊழியர்களைக் கொண்ட சுற்றுலா ஹோட்டல் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

'அம்பயாலு' (உற்ற நண்பர்) என்ற பெயரைக்கொண்ட இந்தச் சுற்றுலா ஹோட்டல் திறப்பு விழாவில் இலங்கையிவுள்ள பல வெளிநாட்டுத்தூதுவர்களும் அரச உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டுள்ளனர்.

ஹோட்டலில் இடம்பெற்ற பிரித் ஓதும் சமய நிகழ்விலும் பிக்குனிகள் மட்டும் கலந்து கொண்டுள்ளதுடன் இதில் பெண்களால் சகல பணிகளும் மேற்கொள்ளப்படுகிறது. இப்புதிய மகளிர் ஹோட்டலில் அனைத்து வேலைகளையும் பெண்களே செய்வது சிறப்பு வாய்ந்தது என்று அழைக்கப்பட்ட விருந்தினர்கள் பலர் தெரிவித்தனர். (எ-இ)

# வர்த்தகரை இலக்குவைத்து துப்பாக்கிச்சூடு

மாத்தறை தெவினுவர, தல்பாவில பகுதியில் நேற்றுமுன்தினம் பிற்பகல் அடையாளம் தெரியாத நபர்களால் வர்த்தகர் ஒருவரை இலக்குவைத்து துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது . இந்த துப்பாக்கிச் சூட்டால் யாருக்கும் எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உலர் மீன் வர்த்தகர் ஒருவருடைய வீட்டின் முன் இந்தச் சம்பவம் நடந்துள்ளது. வர்த்தகரின் வீட்டிற்கு முன்னால் உந்துருயில் வந்த இருவர் உலர் மீன் வாங்குவதாக கூறிய நிலையில், வர்த்தகர் வாயில் கதவை திறந்த போது இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

துப்பாக்கிச் சூடுகள் வீட்டின் சுவரைத் தாக்கியுள்ளன என்றும், துப்பாக்கிச் சூடு நடத்தியவர்கள் வந்த உந்துருளி, சிசிடிவி காட்சிகள் மூலம் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-இ)

# மண் சரிவு எச்சரிக்கை

கொழும்பு, ஜன.14

ஐந்து மாவட்டங்களில் உள்ள பல பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு மண் சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பதுளை, கண்டி, குருநாகல், மாத்தளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் உள்ள பல பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்று தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதேவேளை, நீரேந்து பகுதிகளில் பெய்து வரும் அதிக மழைக் காரணமாக மொத்தம் 13 நீர்த்தேக்கங்கள் நிரம்பி யுள்ளன என்று நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த நீர்த்தேக்கங்களில் மகாகந்தராவ, மகாவிலச்சிய, நுவரவெவ, ராஜாங்கன, உன்னிச்சி, முருத்தவெல, வீரவில, எல்லேவெல, வேமெடில்ல, மெதியாவ, உஸ்கல, எதிமலே மற்றும் வான் எல ஆகியவை அடங்கும். இந்த அனைத்து நீர் தேக்கங்களிலும் நீர் கசிவு அளவை எட்டியுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# பொங்கலன்று மழை

கொழும்பு, ஜன.14

நாட்டின் பல்வேறு பகுதிகளில் இன்று மழையுடனான வானிலை நிலவும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

கிழக்கு, ஊவா மற்றும் வடமத்திய மாகாணங்களிலும் மாத்தளை, நுவரெலியா மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் நாளை 75 மில்லி மீற்றருக்கும் அதிக மழை பெய்யக்கூடும் என்று திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும், மாத்தறை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் மணித்தியாலத்திற்கு 40 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கொழும்பிலிருந்து புத்தளம் மற்றும் மன்னார் வழியாக காங்கேசன்துறை வரையிலான கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது மணித்தியாலத்திற்கு 50 முதல் 55 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக்கூடும். மேல், சபரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களிலும் காலி, மாத்தறை மற்றும் பதுளை மாவட்டங்களிலும் காலை பனியுடனான வானிலை நிலவக்கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. (எ-இ)

# மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழப்பு

வீட்டில் வேலை செய்து கொண்டிருந்த நபர் ஒருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று திங்கட்கிழமை அம்பாறை மாவட்டம் சம்மாந்துறையில் நடந்துள்ளது.

மலையடிக்கிராமம் 3 பகுதியைச் சேர்ந்த 60 வயதான ஒருவரே உயிரிந்துள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் சம்மாந்துறைப் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளது. (எ-இ)

சேவைநலன் பாராட்டும் மணிவிழா வாழ்த்தும்




செல்வி மேரி நேசமலர் அருளையா
Special Trained - Home Economics
(பாட இணைப்பாளர் - தொழிநுட்பபாடம்,
யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி)

சேவை விபரம்
- யா/ சண்டிலிப்பாய் வடக்கு த.க. பாடசாலை 15.12.1989 - 07.03.1993
- யா/ கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை 08.03.1993 - 31.12.1994
- யா/ இளவாலை கன்னியர் மடம் ம.வி. 01.01.1995 - 19.01.2014
- யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி 20.01.2014 - 10.01.2025

ஆசு களைந்து அறிவுரை பகர்ந்து மனையியல் தனையே
மாசின்றி மாணவர்க்கு மகிழ்வுடன் கற்பித்தீர்
ஆளுமையுள்ள ஆசிரியப் பெருந்தகையாய்
பொறுப்புடன் சேவையை விருப்புடன் ஆற்றினீர்.

ஆசையாய் அருகிருந்து அறிவுரை பல கூறி
பாசமுடன் கற்பிக்கும் நேசமலர் ஆசிரியரே
அறுபது அகவையில் அகமகிழும் நன்நாளில்
ஆசிபல கூறி அன்பால் வாழ்த்துகின்றோம்
பார் போற்ற நீங்கள் பல்லாண்டு வாழனும்.

வாழ்த்துவோர்:
ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா / மானிப்பாய் மகளிர் கல்லூரி.

(c s.57201) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேடுதலுக்கு பொலிஸ் சென்ற தோணி கவிழ்ந்து விபத்து

கொழும்பு, ஜன.14

சட்டவிரோத மதுபானங்களை பிடிப்பதற்காக மீனவர் ஒருவருக்குச் சொந்தமான தோணியில் சென்ற நான்கு பொலிஸார் வாவிக்குள் விழுந்துள்ளனர். இந்தச்சம்பவம் அம்பாறையில் இடம்பெற்றுள்ளது. ஏரியைக் கடக்க தோணியில்சென்ற அம்பாறை பொலிஸ் ஊழல் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி உட்பட நான்கு அதிகாரிகள் கவிழ்ந்து நீரில் விழுந்துள்ளனர். பொலிஸ் பொறுப்பதிகாரியின் வசமிருந்த ஒரு கைத்துப்பாக்கி மற்றும் 10 தோட்டாக்கள் கொண்ட ஒரு மேகசின் ஏரியில் காணாமல் போயுள்ளது. துப்பாக்கி மற்றும் ரவைகளை கண்டுபிடிக்க அம்பாறை கடற்படைத் தளத்தைச் சேர்ந்த அதிகாரிகள் குழு விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது என்றும், அம்பாறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

(ஏ-இ)

## பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 12 . 06 . 1974

மறைவு 05 . 02 . 2015

அமரர்

**கெங்காதரன் வனித்தா**

எம் குல விளக்கே!
அம்மா நீர் எமைப் பிரிந்து
ஆனதுவோ ஆண்டுகள் பத்து
ஆனாலும் தேடுகின்றோம்
அனுதினமும் நாம் உம்மை

சிவன் கோவிலடி,
மட்டுவில் மத்தி, சாவகச்சேரி.

உம் பிரிவால் வாடும்
கணவன், பிள்ளைகள்,
மருமக்கள்.

(CS/57197) J-1

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி அழைப்பு



தோற்றம் 09 . 12 . 2002

மறைவு 26 . 01 . 2024

கடந்த 26.01.2024 அன்று சிவபதமடைந்த
எங்கள் குடும்ப விளக்கு

**அமரர் செல்வி தேவதாஸ் கிருபாஜினி**

அவர்களின் முதலாவது ஆண்டுத்திவசமும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று (14.01.2025) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

டச்சு றோட், அந்திரான்,
சண்டிலிப்பாய்.

(cs 57199) (N-1)

குடும்பத்தினர்
074 269 1724, 077 543 8782

அண்ணாமலையான் ஸ்ரீ ராகவேந்திரர்
திருமண மண்டபம்
(ASR WEDDING HALL)
முகூர்த்த நாட்களுக்கான பதிவுகள்


எமது வாடிக்கையாளர்களுக்கும் அன்பர்களுக்கும் இனிய தைப்பொங்கல்
நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.
உங்கள் பிள்ளைகளின் திருமணம் வைபவம், பூப்புனித நீராட்டு விழாக்கள்,
கிறிஸ்தவ பதிவுத் திருமணங்கள், தென்னிந்திய பாடகர்களின் நிகழ்ச்சிகளை
செய்ய விரும்புவோர்கள்.
பதிவுகளை மேற்கொள்ள நாடவேண்டிய மண்டபம்
அண்ணாமலையான் ஸ்ரீ ராகவேந்திரர் கலாசார திருமண மண்டபம்.
மற்றும் திறமை வாய்ந்த போட்டோ, வீடியோ படப்பிடிப்பாளர்களை
ஒழுங்கு செய்துதரப்படும்

- திங்கள் தொடக்கம் வெள்ளிவரை காலை 9.00 மணிமுதல் 4.30 மணிவரையும்.
- சனி காலை 9.00 மணிதொடக்கம் 12.30 மணிவரைக்கும் மண்டபத்தை பார்வையிடலாம்.
- ஞாயிறு விடுமுறை

(cs 57151) (N-1)

இல. 542, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
021 222 1355, 076 744 6064

## மரண அறிவித்தல்



தோற்றம் 22 . 09 . 1946

மறைவு 13 . 01 . 2025

**சிவசிதம்பரம் கிருஷ்ணானந்தன்**

(முன்னாள் பணிப்பாளர்
முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சித் திணைக்களம் - வடக்கு கிழக்கு மாகாணசபை )

ஏழாலை மேற்கு, ஏழாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவசிதம்பரம் கிருஷ்ணானந்தன் நேற்று (13.01.2025) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசிதம்பரம் - இரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - தங்கம் ஆகியோரின் அன்பு மருமகனும், சந்திரவதனியின் அன்புக் கணவரும், பிரசன்னா (கட்டடங்கள் திணைக்களம் - வடமாகாணம்), பிரவீனா (வலயக்கல்வி திணைக்களம் - வவுனியா தெற்கு), கபில்தேவ் (திருகோணமலை வளாகம் கிழக்கு பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், பவதாரணி (ஆயுள்வேத வைத்தியர்), கருணாநிதி (சிறுவர் நன்னடத்தை திணைக்களம் - வவுனியா), பிரமோதனி (ஆசிரியர், திஸ்ஸ மகாவித்தியாலயம் - திருகோணமலை) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், பிரீத்திகை, ஹர்ஷா, கனுஷ், கிஷோபி, வெஜான் கௌஷால், ஜெனுல் கேய்ஜான் ஆகியோரின் பாசமிகு பேரனும் , பத்மாசனி, லட்சுமிகாந்தன் காலஞ்சென்றவர்களான புஷ்பராணி, இந்திராணி, உமாகாந்தன், சத்தியபாமா மற்றும் மாலினி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.01.2025) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

ஏழாலை மேற்கு,
ஏழாலை.

(Cs 57202) N-1

077 529 3410, 077 283 1718, 077 776 0536

## மரண அறிவித்தல்

**நடராசா விஜயராசா (வவி)**



தோற்றம் 09.10.1960

மறைவு 12.01.2025

புங்குடுதீவு 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், உமையாள்புரம் பரந்தனை வதிவிடமாகவும் கொண்ட நடராசா விஜயராசா அவர்கள் நேற்றுமுன்தினம் (12.01.2025) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா மற்றும் - பூமணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு - சிவநேசம் தம்பதியரின் மருமகனும், பானுமதி அவர்களின் அன்புக் கணவரும், சயந்தினி (ஆசிரியர், கிளி/சிவநகர் அ.த.க பாடசாலை), தனுசன், எனுசன் ஆகியோரின் அன்புத் தந்தையும், டிஸ்யந்தன் (சுகாதார உத்தியோகத்தர் கிளிநொச்சி) அவர்களின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்றவர்களான கமலாம்பிகை, ஜெயராசா, புஷ்பவதி மற்றும் ஞானேஸ்வரி, கணேஸ்வரி, பாலேஸ்வரி (ஜேர்மனி), கருணாவதி (ஜேர்மனி), குகராசா (சுவிஸ்), ஆகியோரின் பாசமிகு சகோதரனும், கமலாதேவி (ஜேர்மனி), காலஞ்சென்றவர்களான திருக்குமார், சிவகுமார், சந்திரமலர் மற்றும் அற்புதராணி (லண்டன்), சந்திரமதி, இந்துமதி, ராஜீவி இந்திரராஜா (பிரான்ஸ்), நந்தகுமார் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.01.2025) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 1.00 மணியளவில் பரந்தன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

தொடர்பு: 077 216 5419,
077 474 2003

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலிபான்களுக்கு மலாலா கண்டனம்



லண்டன், ஜன. 14


ஆப்கானிஸ்தானில் உள்ள தலிபான் நிர்வாகம் பெண்களை மனிதர்களாக மதிப்பதில்லை என அமைதிக்கான நோபல் பரிசு வென்ற மலாலா யூசுப்சாய் கண்டித்துள்ளார்.

ஆப்கானிஸ்தானில் ஒவ்வொரு நாளும் பெண்களுக்கு எதிரான அடக்கு முறைகள் தொடர்ந்து வருகின்றன. வீடுகளில் பெண்கள் பயன்படுத்தும் அறைகளுக்கு ஜன்னல் இருக்கக்கூடாது என்ற உத்தரவும் தலிபான்களால் தற்போது பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியிலேயே, தலிபான்களின் அடாவடித்தனம் ஒவ்வொரு நாளும் எல்லைமீறிப் போகின்றது. தலிபான்களின் ஆட்சிக்கு எதிராக உலக நாடுகள் இணைந்து கடும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக முஸ்லிம் நாடுகள் கனதியான செயற்பாடுகளை ஆற்ற வேண்டும் என்று மலாலா யூசுப்சாய் கூறியுள்ளார்.

முஸ்லீம் பெண்களின் கல்விக்கு எதிராகவும், தலிபான்களுக்கு எதிராகவும் குரல்கொடுத்துவந்த மலாலா மீது 2012ஆம் ஆண்டு தலிபான்கள் துப்பாக்கிச் சூடு நடத்தினார்கள். இதையடுத்து அவர் லண்டனுக்குக் கொண்டுவரப்பட்டு தீவிரமான சிகிச்சைக்குப் பின்னர் உயிர்தப்பினார். அவருக்கு அமைதிக்கான நோபலும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

# காஸாவில் போர்நிறுத்தம் வலியுறுத்தினார் பைடன்



வொஷிங்டன், ஜன. 14

**காஸாவில் உடனடியாக நடைமுறைக்குவரும் வகையில் போர் நிறுத்தம் மேற்கொள்ள வேண்டும் என்று அமெரிக்க அதிபர் பைடன் வலியுறுத்தியுள்ளார்.**

அமெரிக்க அதிபர் பைடனுக்கும், இஸ்ரேலிய பிரதமர் நேதன்யாகுவுக்கும் இடையில் நேற்றுக் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது. சுமார் 30 நிமிடங்களுக்கும் மேல் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில், காஸாவில் போர் நிறுத்தம் ஏற்படுத்தப்பட வேண்டியதன் அவசியம் தொடர்பில் அதிபர் பைடன் வலியுறுத்தினார் என்று வெள்ளைமாளிகை அறிக்கையிட்டுள்ளது.

இன்னும் ஒரு வாரத்தில் அதிபர் பைடனின் பதவிக்காலம் முடிவுக்கு வரவுள்ளது. அதற்கு முன்னர் காஸாவில் போர் நிறுத்தத்தை ஏற்படுத்துவதற்கு அவர் தன்னாலான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளார். இது தொடர்பான சிறப்புப் பேச்சுவார்த்தைகளிலும் அதிபர் பைடன் ஈடுபட்டுள்ளார் என்றும் வெள்ளைமாளிகை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அதிபர் பைடனின் பதவிக்காலத்தில், இஸ்ரேலுக்கு அமெரிக்கா வழங்கிய ஆதரவுக்கும் பாதுகாப்புக்கும் நன்றி தெரிவிப்பதாக பிரதமர் நேதன்யாகு தெரிவித்துள்ளார். அமெரிக்காவுடனான தமது ஒத்துழைப்பு என்றும் தொடரும் என்றும் நேதன்யாகு மேலும் கூறியுள்ளார். (ம)

## பொங்கல் விழா

யாழ்ப்பாணம், ஜன. 14

மலரும் மூளாய் அபிவிருத்தி அமையத்தினரால் தைப்பொங்கல் விழா இன்று மாலை 2 மணிக்கு நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் 2024ஆம் ஆண்டு நடைபெற்ற தேசிய ஆக்கத்திறன் போட்டியில் தேசியமட்டத்தில் முதலிடம் பெற்ற ஞானஒளி அறநெறிப்பாடசாலை மூளாய் பண்ணிசை மாணவர்கள் 20 பேர் கௌரவிக்கப்படவுள்ளனர். (ம-125)



யாழ்ப்பாண கூடைப்பந்தாட்ட பயிற்சி நிலையத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இளம் மாணவர்களுக்கு பட்டங்கள் உருவாக்குவது தொடர்பான பயிற்சிகள் வழங்கப்பட்டன. அவர்களால் கட்டப்பட்ட பட்டங்கள் கோட்டைப் பகுதியில் பறக்கவிடப்பட்டன. (ம-22)

## தவறான முடிவெடுத்து இளைஞர் உயிரிழப்பு

கொடிகாமம் ஜன 14

யாழ்ப்பாணம் - புத்தூர் பகுதியில் தவறான முடிவெடுத்து இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ரயிலுக்கு முன்பாகப் பாய்ந்து அவர் உயிரிழந்த நிலையில், இறப்புத் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-159)

## வெடிகுண்டு விவகாரத்தில் புதிய விசாரணை தேவை!

### இலங்கை கத்தோலிக்கத் திருச்சபை வலியுறுத்து

கொழும்பு, ஜன.14

மூன்று வருடங்களுக்கு முன்னர் பொரளை அனைத்து புனிதர்கள் தேவாலயத்தில் இடம்பெற்ற வெடிகுண்டு நாடகம் தொடர்பில் புதிய விசாரணைகளை மேற்கொண்டு குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் என்று இலங்கை கத்தோலிக்க திருச்சபை அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

தேசிய கத்தோலிக்கத் தொடர்பு இயக்குநர் அருட்சகோதரர் ஜூட் கிரிசாந்த இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

கடந்த ஆட்சியின் போது சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று செய்திகள் வெளியாகியிருந்தன. இந்த சந்தேக நபர் தொடர்பில் தற்போதைய அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது என்பதைப்பொறுத்திருந்து பார்க்க விரும்புகின்றோம். அரசாங்கம் இது தொடர்பில் ஆராயவேண்டும்.

இந்த விடயம் தொடர்பில் விரிவான விசாரணை நடத்தப்பட வேண்டும். சம்பவம் தொடர்பில் முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் நடவடிக்கைகள் சந்தேகத்திற்குரியதாக இருந்தன- என்றார். (எ-இ)

# மாணவன் மரணத்தால் சீனாவில் கொந்தளிப்பு

கொழும்பு, ஜன.14

சீனாவின் சான்சி மாகாணத்தில் பாடசாலை மாணவன் ஒருவரின் மரணத்தை அடுத்து அரசாங்கத்துக்கு எதிராக மக்கள் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

கடந்த முதலாம் திகதி அங்குள்ள அரசாங்கப் பாடசாலை ஒன்றில் மாணவர்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலில் ஒரு மாணவன் மாடியில் இருந்து கீழே வீழ்ந்து உயிரிழந்திருந்தார்.

ஆனால் இந்தச் சம்பவத்தை மறைத்து தற்கொலை என மாற்றுவதற்கு பாடசாலை நிர்வாகம் முயல்கின்றது என்று உயிரிழந்த மாணவனின் பெற்றோர் குற்றஞ்சாட்டுகின்றனர்.

உயிரிழந்த மாணவர், சீனாவில் பெரும்பான்மையாக வசிக்கும் ஹான் இனத்தைச் சேர்ந்தவர் ஆவார். அந்த சமுதாயத்தைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் கடந்த 2ஆம் திகதி காலை புச்செங் பகுதியில் அரசு பள்ளியை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர். பள்ளியின் தலைமை ஆசிரியர், துணைத் தலைமை ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

அதையடுத்து பொலிஸார் சம்பவ இடத்தில் குவிக்கப்பட்டபோதும், பொலிஸாருக்கும் மக்களுக்கும் இடையே மோதல்கள் ஏற்பட்டிருந்தன. இந்தப் போராட்டம் தற்போது தொடர்ச்சியாக மாகாணம் முழுவதும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

மயிலத்தமடு

## மாதவனை மேய்ச்சல் தரையில் 20ஆம் திகதி பட்டிப்பொங்கல்!

மட்டக்களப்பு, ஜன. 14

மயிலத்தமடு மாதவனை மேய்ச்சல் தரையில், எதிர்வரும் 20ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணியளவில் பட்டிப்பொங்கல் விழா நடத்தப்படவுள்ளது.

முன்னதாக நாளைமறுதினம் வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடத்தப்படவிருந்த பட்டிப்பொங்கல் விழா மழைவெள்ளம் காரணமாகப் பிற்போடப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ம-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாக்குறுதிகள்...

தைப்பொங்கலை முன்னிட்டு அவர் அனுப்பி வைத்துள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் உள்ளதாவது:-
'அறுவடைத்திருநாள்' என்று பொருள்படும் தைப்பொங்கல், உலகம் முழுவதும் உள்ள தமிழர்கள் மற்றும் இந்துக்களால் மிகுந்த பக்தியுடன் கொண்டாடப்படுகிறது. நிறைவான அறுவடைக்குப் பங்களித்த சூரியன், பூமி, மழை மற்றும் பசுக்கள் மற்றும் உபகரணங்களுக்கு நன்றி செலுத்துவது இந்த நாளின் சிறப்பம்சமாகும். இந்த நாட்டு மக்களின் நற்பண்புகள், நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வு என்பவற்றை மேம்படுத்தி சமூக மாற்றத்துக்கான ஆரம்ப முயற்சியாகவும், சுற்றுச்சூழல் மற்றும் நெறிமுறைக்கான புதிய ஒரு திசையின் தொடக்கமாகவும் 'தூய இலங்கை' திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ள சமயத்தில், தைப்பொங்கல் பண்டிகையைக் கொண்டாடுவது மகிழ்ச்சியளிக்கிறது. வரலாற்று ரீதியாக வேரூன்றிய ஆசிய மரபுகளில் மனிதனுக்கும், சுற்றுச்சூழலுக்கும் இடையிலான பிணைப்புப் பிரிக்கமுடியாதது. தைப்பொங்கல் தினத்தால் வெளிப்படுத்தப்படும் அந்த மரபுகள் இந்தத் திட்டத்தில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. அதேபோல், தைப்பொங்கல் கொண்டாட்டம் மக்களின் கலாசார வாழ்வில் புதிய நம்பிக்கைகளைக் கட்டியெழுப்புகிறது.
நாட்டின் பொறுப்பை ஏற்றுக்கொண்ட நாங்கள், நாம் வழங்கிய வாக்குறுதிகளை தடைகளுக்கு மத்தியிலும் பின்வாங்காத துணிச்சலுடனும் அசைக்கமுடியாத உறுதியுடனும் நிறைவேற்ற உறுதிபூண்டுள்ளோம். இந்த நாட்டு மக்களின் முகங்களில் நீடித்த புன்னகையைக் கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்ட எமது செயற்பாட்டில், புதிய அணுகுமுறைகளுடன், ஒற்றுமையுடனும் பங்கேற்புடனும் ஒன்றிணைய உங்கள் அனைவருக்கும் அழைப்பு விடுக்கிறேன் - என்றுள்ளது. (அ-ம-இ)

## பரஸ்பர...

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-
ஒருவரை ஒருவர் மதித்தல் மற்றும் கைமாறு மறவாத உன்னத பண்புகள் என்பனவற்றைக் கொண்ட தமிழ் மக்களால், ஒவ்வொரு வருடமும் ஜனவரி மாதம் கொண்டாடப்படும் தைப்பொங்கல் பண்டிகையானது உண்மையான கலாசார மதிப்பீடுகளை இவ்வுலகுக்கு எடுத்துரைக்கின்றது.
நாற்று நடுவது முதல் விளைச்சலை அறுவடை செய்வதுவரை விவசாய நடவடிக்கைகளுக்கு சூரிய பகவான் உட்பட இயற்கை ஜீவராசிகள் அனைத்தும் செய்யும் உதவிகளுக்கு நன்றி செலுத்தவே இந்தப் பண்டிகை கொண்டாடப்படுகிறது.
நாம் அனைவரும் இயற்கையின் படைப்புகள். இயற்கையை மீறி எம்மால் எந்தப் பயணத்தையும் மேற்கொள்ள முடியாது. இதனால் இயற்கையினூடாக எமக்குக் கிடைக்கப்பெற்ற ஆசீர்வாதங்களுக்கு கைமாறு செய்வது மிகவும் உன்னதமான மனிதப் பண்பாகும். நாடு என்ற அடிப்படையில் நாம் விசேட மைல்கற்களை எட்டியுள்ளோம். கட்டமைப்பு மற்றும் கொள்கை ரீதியிலான மாற்றம் உட்பட, மனநிலையிலும் மாற்றத்தை ஏற்படுத்தி மறுமலர்ச்சியை உருவாக்க வேண்டிய பொறுப்பு எமக்கு உள்ளது.
இவ்வாறான தருணங்களில் இயற்கையைப் போற்றி அதற்கு நன்றி செலுத்தும் இத்தகையதொரு அற்புதமான பண்டிகையைக் கொண்டாடுவது, கலாசார ரீதியிலான செழிப்பான பிரஜைகளை உருவாக்குவதற்கு அடிப்படையாக அமையும். ஒருவரையொருவர் மதித்தல் மற்றும் மற்றவர்களின் மதம், கலாசார உரிமைகளை மதிக்கும் விசேட மனிதப் பண்புகள் மற்றும் நல்லிணக்கத்தில் பூரணமடைந்த இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கு இந்தத் தைப்பொங்கல் தினத்தில் நாம் உறுதிகொள்வோம் - என்றுள்ளது. (அ-ம-26)

## பாலுக்கு...

நேற்று மாலை நீண்ட வரிசை காணப்பட்டுள்ளது. குறிப்பாக யாழ். நகரம், கொக்குவில், கோண்டாவில் ஆகிய பகுதிகளிலேயே நேற்று மாலை இவ்வாறு நீண்ட வரிசையைக் காண முடிந்தது. நீண்ட வரிசையைத் தொடர்ந்து, ஒருவருக்குத் தலா அரை லீற்றர் பாலே வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-66)

## தையிட்டியில்...

ஆரம்பித்த போராட்டம் நேற்றும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டது. தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.
தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், கட்சியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன், கட்சியின் கொள்கைப் பரப்புச் செயலாளர் சட்டத்தரணி ந. காண்டீபன், கட்சியின் ஊடகப் பேச்சாளர் க. சுகாஷ், கட்சியின் செயற்பாட்டாளர்கள் மற்றும் ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளின் உரிமையாளர்கள் எனப் பலரும் போராட்டத்தில் கலந்து கொண்டனர். (அ-ம-66)

## ஜப்பானில்...

விடுக்கப்பட்டுள்ளது. ரிக்டர் அளவு கோலில் 6.9 அலகுகளாக இந்த நிலநடுக்கம் பதிவாகியது. நிலநடுக்கத்தால் கட்டடங்கள், வீடுகளில் பெருமளவு சேதங்கள் ஏற்பட்டுள்ளன. கடற்பகுதியிலும் நிலநடுக்கத்தின் மையப்புள்ளி நிலைகொண்டுள்ளதால் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
நிலநடுக்கத்தைத் தொடர்ந்து ஜப்பானின் தெற்குக் கடற்பகுதியை பெரியளவு அலைகள் தாக்கத் தொடங்கியுள்ளன. பாதுகாப்பு நடவடிக்கைக்காக பல்லாயிரம் மக்கள் வெளியேற்றப்பட்டு இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.
தென்கொரியா மற்றும் தாய்வான் நாடுகளும் ஜப்பானின் சுனாமி எச்சரிக்கை தொடர்பில் மிகுந்த அவதானத்துடன் உள்ளன. அத்துடன், ஜப்பானில் நிலநடுக்கம் ஏற்பட்ட பகுதியில் மீட்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம)

## சிறுமி...

றைப் பொலிஸாரிடம் வழங்கிய முறைப்பாட்டுக்கு அமையவே இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. சந்தேகநபர்கள் நால்வரும் நேற்று நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட நிலையில், அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (அ-ம-26)

## தமிழ்த்தேசியக்...

காணவில்லை. தேர்தலில் போட்டியிடுவதும், அதன்பின்னர் மாயமாவதும்தான் அவருக்குரிய ஒப்பந்தம். அவர் தற்போது அரசியலில் இல்லை. தமிழ்ப் பொதுவேட்பாளர் எதற்காக வந்தார்? யாரின் நோக்கத்தை நிறைவேற்றக் களமிறங்கினார்?
கடந்த பொதுத்தேர்தல் பெறுபேறுகளை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, யாழில் வாக்குகள் சிதறியுள்ளன. தமிழ்த்தேசிய அரசியல் ஒரு விதத்தில் சவாலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.
அன்று வடக்குப் பிரச்சினையைப் பயன்படுத்தியே இந்தியா நாட்டுக்குள் நுழைந்தது. இன்று அதற்கான தேவைப்பாடு இல்லை. ஏனெனில் கொழும்பு அரசு எல்லாவற்றுக்கும் உடன்பட்டுள்ளது.
இவ்வாறு தெற்கு ஊடாக இந்தியத் தலையீடுவரும்போது வடக்கில் எதிர்ப்புக் கிளம்பும் என்பதால் தமிழ்த்தேசிய அரசியலையும் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டிய தேவைப்பாடு இந்தியாவுக்கு உள்ளது - என்றார். (அ-ம-44)

## இலங்கை...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
'இலங்கையென்பது சிங்கள தேசமாகும். வடக்கில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் என ஒருவர் இருக்கின்றார். அவர் பௌத்த சாசனத்துக்கு எதிராகக் கூக்குரல் எழுப்புகின்றார். எமது நாட்டில் அவ்வாறு செய்யமுடியாது.
பண்டுகாபய மன்னர் முதல் சிங்கள மன்னர்களே இலங்கையை ஆண்டுள்ளனர். எனவே, இது சிங்கள, பௌத்ததேசமாகும். எனினும், பௌத்த தர்மத்துக்கமைய நாம் அனைத்துச் சமயங்களையும், இனங்களையும் மதிக்கின்றோம். ஆதலால், இங்குள்ளவர்கள் எம்முடன் கைகோர்த்துப் பயணிக்க வேண்டும்.
அவ்வாறு இல்லாமல் எமது கரங்களை உதைத்துக்கொண்டு செல்ல முற்பட்டால் வாழ்வதற்கு தனியான உலகைத் தேடிக்கொள்ள நேரிடும்.
அதற்காகவே 'மேர்வின் சில்வா' போன்றவர்கள் இருக்கின்றார்கள். வடக்கு, கிழக்கு, தெற்கு என்றில்லை இது ஒரு நாடு. பௌத்த சாசனம் இங்கு பாதுகாக்கப்பட வேண்டும். அதற்கு எதிராக ஆட்சியாளர்கள் செயற்பட்டால் இயற்கை நிச்சயம் தண்டிக்கும்' - என்றார். (அ-ம-44)

## ஜனாதிபதி...

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க கடந்த மாதம் மத்திய பகுதியில் இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டிருந்தார். அவர் ஜனாதிபதியாக மேற்கொண்ட முதலாவது வெளிநாட்டுப் பயணமாக அந்தப் பயணம் அமைந்திருந்தது. இதன் தொடர்ச்சியாகவே, தற்போது அவர் சீனாவுக்குச் சென்றுள்ளார். இதன்படி, அவரின் இரண்டாவது வெளிநாட்டுப் பயணமாக சீனப் பயணம் அமைந்துள்ளது.
இன்று முதல் எதிர்வரும் 17ஆம் திகதிவரை சீனாவில் தங்கியிருக்கவுள்ள ஜனாதிபதி அநுர, சீன அதிபர் ஜின்பிங் உள்ளிட்ட பலரையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். சீனாவுடன் இருதரப்பு ஒப்பந்தங்களிலும் ஜனாதிபதி அநுர தலைமையிலான குழுவினர் கைச்சாத்திடவுள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. சீனாவின் வர்த்தக மையங்கள், முதலீட்டு வாய்ப்புகள் தொடர்பில் இந்தப் பயணத்தின் போது கவனத்தில் கொள்ளப்படும் என்றும் தகவல்கள் வெளிவந்துள்ளன. ஜனாதிபதி அநுரவின் இந்தப் பயணத்துக்கு முன்பாக, தாய்வானைத் தனிநாடாக ஏற்க மறுக்கும் 'ஒரே சீனா' கொள்கைக்கு இலங்கை அரசாங்கம் பகிரங்க ஆதரவை அறிவித்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

## தோரணம்...

உள்ள கட்டு, 100 ரூபா முதல் 150 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டன. (அ-ம)

## பொலநறுவை...

பின்னர் திருவெம்பாவை பாடல் ஒலித்துள்ளது.
சைவத்தின் தொன்மைக்குச் சான்று பகரும் ஆலயங்களில் ஒன்றான பொலநறுவை சிவன் கோவிலில், சோழர் காலத்தின் பின்னர் இதுவரை திருவெம்பாவை ஒலிக்காத நிலையில், வரலாற்று முயற்சியாக இந்த வருடம் திருவெம்பாவை ஒலிக்கவிடப்பட்டுள்ளது. (அ-ம-இ)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நல்லூரில் காணி விற்பனைக்கு

நல்லூர் நாவலர் வீதியில் (Temple Road) க்கு அருகில் 1 1/4 பரப்புக் காணி விற்பனைக்கு மற்றும் வெள்ளவத்தையில் 740,1350 Sqft, தெகிவளையில் 1150 Sqft, கல்கிசையில் 950 Sqft Apartments, தனி வீடுகள் விற்பனைக்கு.

தொடர்பு:- 076 306 0013

## PHYSICS A/L 2025, 2026

A/L 2025 Revision வகுப்புக்கள்
தமிழ்/ ஆங்கில மொழிமூல வகுப்புக்கள்
(15.01.2025) மாலை 3.30 மணிக்கு
த.சம்பந்தன் BSc
(தேசிய பாடசாலை ஆசிரியர்)

பிரத்தியேக வகுப்புக்கள்
158, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (N.S.B அருகில்)

SCIENCE OCEAN
Brawn Road, Jaffna.

(CS/2213)J-1

Tel - 077 787 2903

## நிரு கல்வி நிலையம்

2025, 2026 A/L Day Class
மீண்டும் யாழ் மண்ணில் கணித, விஞ்ஞானப் பிரிவுகள்,

- பௌதிகவியல் திரு. த.சம்பந்தன் BSc, PGDE
- இரசாயனவியல் திரு.சு. சுரேஸ்குமார் BSc PGDE
- இணைந்த கணிதம் திரு. A.பத்மநாதன் BSc
- உயிரியல் திரு.R. குகாநந்தன் BSc PGDE MED

(CS/2246) J-1

ஆரம்பம் :- 18.01.2025 சனிக்கிழமை, நேரம் :- 09.00am
இடம் :- புகையிரத நிலைய வீதி, கோண்டாவில்.

தொடர்புகளுக்கு:-
077 787 2903, 077 555 9028, 077 691 1696

இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள்


## டயர் மீள் நிரப்பும் சேவை

யாழ். நகரில் டயர் மீள் நிரப்பும் நிறுவனமான நோர்தன் இன்டஸ்ரீஸ், வாடிக்கையாளர்களுக்கு தமது தரமான சேவையை வழங்கி வருகிறது. உங்கள் இடத்திற்கே வந்து டயர்களைப் பெற்று மீள் நிரப்பித் தருவதோடு வாடிக்கையாளர் தாம் விரும்பும் அச்சுக்களை தெரிவு செய்யவும், துரித சேவையை வழங்கவும் காத்திருக்கிறது.

**நோர்தன் இன்டஸ்ரீஸ்**
**69, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.**

(CS/57198) J-1

021 222 1735, 070 714 8691



# கபளீகரம் செய்யும் காட்டுத்தீ அமெரிக்காவில் 24 பேர் பலி!

நியூயோர்க், ஜன.14

அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சலிஸில் பரவிவரும் காட்டுத்தீயால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 24 உயர்ந்துள்ளது என்று சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

மணித்தியாலத்துக்கு சுமார் 96 கிலோமீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசுவதால், தற்போதைய காட்டுத்தீப்பரவல் நிலைமை எதிர்வரும் நாள்களில் மேலும் அதிகரிக்கக்கூடிய அபாயம் உள்ளது என்று அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

காட்டுத்தீப்பரவல் காரணமாக பெலிசேட்ஸ் பகுதியில் 23 ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமான நிலப்பரப்பு அழிவடைந்துள்ளதுடன், ஈடன் பகுதியில் 14 ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமான நிலங்கள் காட்டுத்தீ காரணமாக அழிவடைந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.



அமெரிக்க தீயணைப்புக் குழுக்கள், காட்டுத்தீ பரவுவதைத் தடுப்பதற்கான முயற்சிகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றன என்றும் சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (எ-இ)

# கட்டட இடிபாடுகளிலிருந்து அனைவரும் நலமாக மீட்பு

புதுடில்லி, ஜன.14

இந்தியாவின் உத்தரப் பிரதேச மாநிலத்தின் கன்னவுஜ் ரயில் நிலையக் கட்டடத்தின் ஒரு பகுதி இடிந்து விழுந்த விபத்தில், இடிபாடுகளில் சிக்கிய 28 பேரும் மீட்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மீட்கப்பட்டவர்கள் அனைவரும் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும், விபத்தில் எந்த உயிரிழப்புகளும் ஏற்படவில்லை என்றும் மீட்புக் குழுவினர் தெரிவித்துள்ளனர். (எ-இ)

## மரண அறிவித்தல்

### நாகலிங்கம் சிவசுப்பிரமணியம்

**(மருந்தாளர், காவேரி மருந்தகம், கொக்குவில்)**



**தோற்றம்** 10.01.1944 **மறைவு** 13.01.2025

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் இணுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் சிவசுப்பிரமணியம் (மருந்தாளர், காவேரி மருந்தகம், கொக்குவில்) அவர்கள் நேற்று (13.01.2025) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்-செல்லம்மா தம்பதியரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்றவர்களான சிவகுரு - யோகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சந்திரவதனி அவர்களின் அருமைக் கணவரும், அன்னபூரணம், இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் யோகராஜ், ஸ்ரீனிவாசன் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான பரஞ்சோதி, பரிமளம் மற்றும் சுந்தரலிங்கம், தருமராசா, தவயோகராணி, புஸ்பரதி, யோகேந்திரா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.01.2025) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**இணுவில் தெற்கு,**
**இணுவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

## அறிவித்தல்

69, 71, 73, 75, 75/1, 75/2, 77, 77/1, 77 1/1, 81, 83, 99, 101, 103, 103/10, 103/12, 103/13, 103/14, 103/15, 109, 109/3, 109/5, 109/6, 109/7, 109/8, 109/9, 111, 113, 115 மானிப்பாய் வீதி (பொன்னாலை வீதி) யாழ்ப்பாணம் எனும் ஆதன வரிமதிப்பீட்டிலக்கம் கொண்ட குறித்த ஆதனங்கள் யாழ்ப்பாணம் வண்ணை வைத்தீஸ்வரன் கோவிலுக்கு சொந்தமான ஆதனங்கள் ஆகும்.

குறித்த ஆதனங்களை எவரும் விற்பனை செய்யவோ, நன்கொடை அளிக்கவோ, வேறு எந்த விதத்திலும் பாரதீனப்படுத்தவோ முடியாது என இத்தால் அறியத்தருவதோடு அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடும் நபர்களுக்கெதிராக தகுதி வாய்ந்த நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படும் எனவும் இத்தால் அறியத் தரப்படுகின்றது.

மேலும் குறித்த ஆதனங்களை குறித்த யாழ்ப்பாணம் வண்ணை வைத்தீஸ்வரன் கோவிலின் பரம்பரை தர்மகர்த்தா, முகாமையாளர், உரிமையாளரின் அனுமதியின்றி உடமை கொள்வதும் சட்டவிரோதமானது என்றும் இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது.

**கந்தப்பச் செட்டியார் வைத்திலிங்கச் செட்டியார்**
**பரம்பரை தர்மகர்த்தாவும், உரிமையாளரும்**
**முகாமையாளரும்**

(CS/57198) J-1



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.01.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org